தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

74484

துணர்: ருஎ

மலர்: உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு: உ௲௰௪, — வைகாசி

(1983 மே—சூன்)

பொழிற்றொண்டர்:
வே. சுப்பிரமணியன்

தமிழ்ப் பொழில்

துணர்: ருஎ | மலர்: உ

உள்ளுறை

1. பாரதி கண்ட குயில் — ஒரு புதிய பார்வை ... 49
த. அழகப்பராசு, எம். ஏ., பி. ஜி, டி. எம்.,
இளநிலை ஆய்வாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-600 113.

2. பொன்பற்றி — ஓர் ஆய்வு ... 54
புலவர் இராம. இராமமூர்த்தி, எம். ஏ., எம். எட்.,
ஔவையார் மகளிர் கல்லூரி, காரைக்கால்.

3. தமிழ் நூல்களில் அடிப்படைக் குறிக்கோள்கள் ... 58
முனைவர் கு. மோகனராசு, B. Sc., M. A., Ph. D.,
D. Anth., D. Geog., D. H. Ed., Cert. Skt,
சென்னைப் பல்கலைக் கழகம்.

4. உழக்கெண்ணெய் ஈசுவரர்
ஒரு மறுப்பு விளக்கம ... 72
திரு. ந. ரா. முருகவேள்,
17, வரசித்தி விநாயகர் கோயில் தெரு, சென்னை-15.

5. குழந்தை மனவியலும் இலக்கியமும் ... 74
தஞ்சை பா. இறையரசன், க. மு.

6. மொழிநிகண்டுகள் மொழியும்
தொகைப்பெயர்கள் ... 83
—'அறிவன்'—
மா. சற்குணம், எம். ஏ.,
துணைப் பேராசிரியர்,
ஸ்ரீ சி. பா. சு. தமிழ்க் கல்லூரி, மயிலம்.

7. ஜெயகாந்தனின் 'ஜய ஜய சங்கர' — திறனாய்வு ... 90
து. மூர்த்தி,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

—(★)—

தமிழ் வாழ்க!

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்: ௫௭ | திருவள்ளுவர் யாண்டு—௨௲௰௪ | மலர்: ௨

உருத்ரோத்காரி — வைகாசி

1983 மே — ஜூன்

''பாரதி கண்ட குயில் — ஒரு புதிய பார்வை''

— த. அழகப்பராசு, எம். ஏ., பி. ஜி. டி. எம்.,
இளநிலை ஆய்வாளர்.

பாடல் தன்மைகள்:-

குயிற்பாட்டைப் பல மூலங்களைக் கொண்டு அமைந்ததாகக் காட்ட முனைகின்றனர் ஆய்வாளர்கள். கீட்சின் 'Ode to the Nightingale' என்ற பாட்டும், 'எண்டியாமின்' என்ற பாட்டும், சேக்ஸ்பியரின் 'வேனிற்கால நள்ளிரவு' என்ற நாடகமும், வேர்ட்ஸ் வொர்த்தின் பாடல்களும், இத்தகைய ஒப்புயர்வற்ற பாடலைத் தோற்றுதற்கேற்ற உணர்வூக்கத்தைத் தந்தன என்று காட்டு கின்றார், மீனாட்சிசுந்தரனார் [1] இப்படி மேலை இலக்கியங் களின் தாக்குறவு கொண்டு இவர் குயிற்பாட்டைப் படைத்தாலும், அவ்விலக்கியங்களில் காணப்படும் விரக்தி முடிவுகளை — மனப் பான்மைகளைக் காட்டவில்லை அதற்கு மாறாகச் செழுமைப் பாடலை இன்ப முடிவிற் காட்டுகின்றார்.

இதைக் கதைப்பாடல், சிறுகாப்பியம், நாடகக் கவி என்றெல் லாம் காட்டி நிற்கின்றனர் ஆய்வாளர்கள் இக்காதல் கவிதையைச் சிறுகாப்பியம், நாடகம் என்பதைவிட கதைப்பாடல் என்பதைப்பலர்

ஏற்கின்றனர். கதைப் பாடலின் இயல்புகள் இதில் மிகுதியும் காணப்படுவதே இதன் காரணம். வாழ்க்கையின் பிடிப்புகள், இன்ப துன்பங்கள், பிறவியுண்டு என்ற கொள்கை, அரசன் மகன், மாமன் மகன் போன்ற உறவுகள் இவையெல்லாம் கதைப்பாடற் கூறுகளை நமக்குக் காட்டி நிற்கின்றன. மொட்டைப் புலியன், நெட்டைக் குரங்கன், பூர்வஜென்மக் கதை போன்றனவும், தத்துவம், வேதாந்தம் போன்ற கருத்துகளை ஆசிரியர் சுட்டிச் செல்வதும் கருத்துக்கு அரணாகின்றன.

இப்பாடல் அகவற் பாவால் ஆனது என்று சிலர் கருதுகின்றனர்.[2] அது பொருந்துமாறு இல்லை. இது வரையறுக்கப்பட்ட யாப்புக்குள் அடங்கும் நிலையிலும் அமைக்கப்படவில்லை. ஒரு அடிக்குள் மட்டும் வெண்சீரும், வெண்டளையும் அமைகின்றன. ஆனால் வெண்பாவின் அமைவின்படி முதலடியின் ஈற்றுச் சீரும் அடுத்த அடியின் முதற்சீரும் பொருந்தவில்லை. அந்தந்த அடியளவில் மட்டும் வெண்பா நிலையைப் பெற்றுள்ளது. இதனால் நாம் இதற்கு ஒரு வரையறுத்த யாப்பு முறையைக் காண இயலவில்லை.

படைப்புத் தன்மைகள்:-

எந்தக் குறிக்கோளையும் மனதில் திட்டமிட்டு அமைத்துக் கொண்டு பாடாத, அடிமனக் காட்சியின் வெளிப்பாடாக இக்கனவு நிலைக் கற்பனைப் படைப்பிற் கவிஞனின் அடிமனத்திற் புதைந்து கிடக்கும் ஏக்கத் தவிப்புகள் கவியாற்றலோடு இணைந்து தங்கு தடையின்றிப் பீறிட்டுப் பொங்கி வழிகின்றன.[3]

பகற் கனவின் மயக்கத்தால் 'உள்மனம்' தொழிலாற்றத் தொடங்கும்போது படைக்கப்பட்ட குயிற்பாட்டு 'ஞானரதம்' போன்று அமைந்துள்ளது. கற்பனையாகப் படைக்கப்பட்ட ஞானரதத் தேரில் ஏறிக் காந்தர்வலோகஞ் சென்று பர்வதகுமாரி என்ற காந்தர்வ பெண்ணின் துணைகொண்டு பல்வேறு உலகங்களையும் கண்டு கவிஞன் வருகிறான்.

> ''கண்ணை விழித்துப் பார்த்தபோது பழைய திருவல்லிக்கேணியில் பழைய இடத்தில் என்னைச் சுற்றிச் சிலர் வீசிக் கொண்டிருப்பதைக் கண்டேன்''

என்று முடிக்கின்றான் கவிஞன்.

அது,

> ''... ... ... பிறகு விழிதிறந்து பார்க்கையிலே சூழ்ந்திருக்கும் பண்டைச் சுவடி. எழுதுகோல், பத்திரிக்கைக் கூட்டம், பழம்பாய் வரிசையெல்லாம் ஒத்திருக்க நாம் வீட்டில் உள்ளோம் என உணர்ந்தேன்''[4]

என்ற குயிற்பாட்டின் முடிவிற்கு ஒத்தமைகின்றது. பின்னதில், 'பழைய பாய்' என்பது அவரது ஏழ்மை குடிகொண்ட வாழ்வின் உண்மை நிலையினைக் காட்டி நிற்கின்றது.

'வாழ்வில் விரக்தி அடைந்த இவ்விரு கலைஞர்களும் (பாரதி, ஷெல்லி) உலகத் துன்பங்களிலிருந்து தற்காலிக விடுதலை பெற படைத்த தூய கவிதைகளாக இப்படைப்புகளைக் கொள்ள முடியும்.[5] என்று ஞானரதத்திற்கு விளக்கம் தருவது இக்குயிற் பாட்டிற்கும் பொருந்தி அமைகின்றது.

காற்று என்ற உரைநடையில் அமைந்த (வசன கவிதை) கற்பனை ஓவியம் படைக்கப்பட்டுள்ளது. இது குயிற்பாட்டு, ஞான ரதம் போன்றவற்றுடன் கற்பனைச் சிறப்பில் முழுமையும் ஒத்து வராத போதிலும், உச்ச நிலையமைப்பில் ஓரளவு குயிற்பாட்டின் தன்மையைப் பெற்றிருக்கின்றது. இதைக் குயிற்பாட்டு போன்று பகற் கனவின் நிலையில் அவர் அமைக்கவில்லை. ஆனால் இதை நாம் சிறந்த அடிமனக் காட்சி என்று கருதலாம்.

இவ்வோவியம் இரு துண்டுக் கயிறுகள் (கந்தன், வள்ளி) காதல் புரிவதாக உரைநடையில் தீட்டப்பட்டுள்ளது. அவை தம் முன் துள்ளிக் குதித்து மகிழ்ந்து உறங்கிவிடுகின்றன. கயிறு வெடிக்கிறது—அதிலிருந்து காற்றுத் தேவன் தோன்றுகின்றான். இது நமக்கு குயில் மறைந்து பெண் தோன்றிய காட்சியை நினைவுக்குக் கொண்டு வருகின்றது.

இப்படிப் பகற்காலக் கனவுகளில் அவன் வாழ்ந்து வந்ததை இல்லாளும்[6] இணைகாலக் கவிஞரும் சுட்டுகின்றனர். பகற் கனவிலும் அடிமன நிலையிலும் இவன் சில இலக்கியங்களைப் படைத்துள்ளான் என்பதைப் பாரதியின் இம்முப்படைப்புகள் காட்டி நிற்கின்றன. இக்கண்ணோட்டத்தில் பாரதி ஆய்வுகள் நடக்கும்போது வேறு சில படைப்புகளும் இத்தன்மையதாகலாம்.

பாரதி விரும்பிய பெண்:

பாரதியின் வாழ்க்கை வரலாற்று வழி நமக்கு அகச்சான்றுகள் எதுவும் கிடைத்திலது என்றாலும் நாம் அவன் காண — கலக்க விரும்பிய பெண்ணை அவனது படைப்புக் கொண்டு உணரமுடிகின்றது. அவன் தனது இல்வாழ்க்கைத் 'துணைவியுடன் மனங் கலந்து ஒன்றி வாழ்ந்தானா என்று ஐயுற வேண்டியுள்ளது.

பாரதியார் வெளியிடங்களுக்குச் சென்றுவிட்டுக் காலங்கடந்து திரும்புதல், இரவு இல்லம் வராதிருத்தல் போன்றவற்றால் செல்லம்

மாள்பாரதி கோபம் கொண்டு இல்லம் விட்டுத் தனது தாயகம் சென்று விடுகின்றாள். வெளியிலிருந்து திரும்பிய பாரதி அவள் ஊருக்குச் சென்றுவிட்டதை அறிந்தார். இவள் பல நேரங்களில் இவ்வாறு சென்றுவிடுவது கண்டு அவரும் கோபம் கொண்டார். சீனிவாசரிடம் சென்று அவள் என்னிடமும் சொல்லிக்கொள்ளாமல் அடிக்கடி ஊருக்குச் சென்றுவிடுகின்றாள். எனக்கு அப்போக்குப் பிடிக்கவில்லை. நான் வேறு மணம்புரிந்து கொள்ளலாம் என்று இருக்கின்றேன்'' என்று கூறினாராம்.7 மனைவி பிறந்தகம் சென்றிட்டாள் என்ற உடனேயே இப்படிக் கூற கவிஞனின் மனம் துணிகிறது எனில் அது உள்ளம் ஒத்து நடந்த வாழ்க்கையாகத் தெரியவில்லை. அன்றி அவ்வளவு எளிதில் வேறுமணம் முடிக்க கவிஞன் மனம் இடங்கொடுக்காது

அவர் காதலித்த பெண்ணை மணம் முடிக்க இயலாமல் கட்டு மணத்தை ஏற்றுக்கொண்டார் போலும். இதுமட்டுமின்றி அவரது படைப்புக்கள் சிலவும் இப்படி எண்ணத்தை ஏற்படுத்துகின்றன.

தன்னைத் துன்புறுத்திக் கொண்டிருக்கும், சொல்ல முடியாத வாழ்க்கை இரகசியத்திற்கு ஒரு வழி காண வேண்டும் என்ற நோக்கத்தோடு8 இந்தக் குயிற்பாட்டைப் படைத்ததாகக் கருதுவர். இங்குச் சுட்டப் படும் இரகசியம் காதலாகவும் இருக்கலாம்.

இவர் தமது சுயசரிதையில் பிள்ளைக் காதலில் தனது காதல் பற்றிப் பேசுகின்றார்; அவளை

''ஒன்பதாய பிராயத்த ளென்விழிக்
    கோதுகாதை சகுந்தலை ஒத்தனள்''

என்று காட்டி, அவள் மீது தான் கொண்ட,

''கன்னிமீதுறு காதலின் ஏழையேன்
    கவலையுற்றனன் கோடியென் சொல்லுகேன்''9

என்ற நிலையையும் காட்டுகின்றார்.

பின்னர், 'அழகு தெய்வம்' என்ற கவிதையில்,

''மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்
வயதுபதி னாறிருக்கும் இளவயது மங்கை
....
தூங்காதே எழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்
அங்கதனிற் கண்விழித்தேன் அடடாவோ அடடா
அழகென்னுந் தெய்வந்தான் அதுவென்று அறிந்தேன்''

என்று பாடுகின்றார். இவ்விரண்டையும் கனவென்றே அவர் சொல்லுகின்றார், தான் இளம்பிராயத்திலே ஒன்பது வயதுப் பெண்ணைக் கண்டு விரும்புகிறார். பின்னர் கட்டுமணத்தால் வேறு பெண்ணை (செல்லம்மாள்பாரதி) மணக்கிறார் காலங் கடந்து ஏழாண்டுகள் புரண்டன. அப்போது அவர் அந்நங்கையின் பதினாறாம் அகவையில் காண்கிறார். அங்கு அவளை அழகே உருவான பெண் தெய்வமாகவே அவர் பார்க்கின்றார். இந்நிலையின் வளர்ச்சிதான் குயிற்பாட்டு. அம்மங்கை இப்போது இன்னும் வளர்ந்துவிட்டாள். அவள்தான் குயிலாகக் கவிஞர் படைப்பில் வந்து வாழத் தொடங்கினாள்.

முடிப்புரை:–

1. பாரதியின் படைப்புகளுள் குயிற்பாட்டு தனியிடம் வகிக்கின்றது.

2. மேலை இலக்கியங்களின் தாக்குறவோடு இலக்கியம் படைத்தாலும் அங்குள்ள விரக்தியை விட்டு–செழுமையைக் காட்டுகின்றார்.

3. கதைப்பாடல் தன்மைகள் பெற்ற இப்பாடலை யாப்பு அளவுக்குள் பொருத்த முடியவில்லை.

4. பாரதி தனது வாழ்வில் காதலித்த/மணக்க விரும்பிய பெண்ணை மனங்கொண்டு குயிற்பாட்டுப் படைக்கப் பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

——✱——

அடிக்குறிப்புகள்:–

1. பாரதி பாநிலை, கா. மீனாட்சிசுந்தரம், பக். 180–181.
2. பாரதி கவித்திறன், மு. கோவிந்தசாமி,
3. டாக்டர் ஜான்சாமுவேல், ஷெல்லியும் பாரதியும், பக் 248.
4. குயில், பூர்வஜென்மக் கதையுரைத்தல், பக். 53–56.
5. திறனாய்வுச் சிந்தனைகள், ஜான்சாமுவேல், பக் 135.
6. அ) செல்லம்மாள் பாரதி, பாரதியார் சரித்திரம், பக். 5.
   ஆ) சுத்தானந்தபாரதி, கவிக்குயில் பாரதியார், பக். 12.
7. பாரதி நினைவுகள், எதுகிரியம்மாள், பக். 48.
8. பாரதி பாநிலை, பக். 180.
9. சுயசரிதை, பின்னைக்காதல், பாடல் 6, 13.

—O—

பொன்பற்றி — ஓர் ஆய்வு

புலவர் இராம. இராமமூர்த்தி, எம். ஏ., எம். எட்..

தண்டமிழ் நன்னாட்டில் ஒரே பெயரான் அமைந்த பல ஊர்கள் உள; அவற்றுள் சில வரலாற்றொடு தொடர்புடையன; சிறப்புடையன. அச்சிறப்பு நோக்கிப் பின்னாளில் வேறு சில ஊர்கட்கும் அப்பெயர்கள் இடப் பெற்று வழங்கலாயின. பிற்றை நாள் ஆய்வாளர்கள், தமக்குக் கிட்டிய சான்றுகளைக் கொண்டு ஊர்ப் பெயரொடு தொடர்புடைய வரலாற்றுச் செய்திகளை வெளிப்படுத்தினர்; வெளிப்படுத்தி வருகின்றனர். ஆனால், ஆய்வாளர்களும் முழுமையான சான்றுகளைப் பெற இயலாத நிலையில் ஊகத்தான் சிலவற்றை நிறுவ முற்படுகிறார்கள். அவற்றான் வரலாற்றில் வழீஇய இடங்களும் உண்டு. அவற்றுள் ஒன்றையே ஈண்டுத் தருகிறேன்.

பொன்பற்றி என்ற பெயரானமைந்த ஊர்கள் இரண்டு சோழ நாட்டில் உள்ளன. ஒன்று இந்நாளைய புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த அறந்தாங்கி வட்டத்தில் அமைந்துள்ள, 'பொன் பேத்தி', என வழங்கப்பெறும் பொன்பற்றி. மற்றொன்று, புதுவை நேராட்சிப் பகுதிசை சார்ந்த காரைக்காலுக்கு அண்மையிலமைந்துள்ளதும், 'பொன்பேத்தி' என வழங்கப்படுவதுமாய பொன்பற்றியாகும். இப்பொன்பற்றியொடு தொடர்புடைய வரலாற்றுச் செய்தி யாதென்பதை முன்னர்க் காண்பாம். அதன் பின், அவ்வரலாறு எப்பொன்பற்றியொடு தொடர்புடையது என்பதையும் ஈண்டுக் காண்பாம்.

தமிழ் நாட்டில் புத்தமும் சமணமும் ஓங்கியிருந்த காலமொன்றுண்டு. அந்நாளில் புத்த நெறியைப் போற்றிய மன்னரும், மக்களும் வாழ்ந்திருந்தனர். அந்நெறி யீடுபாட்டான் பல பதிகட்குப் பெயர்களும் வழங்கலாயின என்பதும் வரலாற்றுண்மைகளே. அங்ஙனம் புத்த நெறியில் ஈடுபாடு கொண்ட ஒரு குறுநில மன்னர் 'புத்தமித்திரனார்' ஆவார். அவர் வீரசோழன் என்னும் வீரராசேந்திரன் காலத்தவர். இவர் 1பொன்பற்றி காவலர் எனவும், வீர ராசேந்திரன் பெயரான், 'வீரசோழியம்' என்ற இலக்கண நூலை யாத்தவர் என்பதும், வீரசோழிய இலக்கணத்திற்கு உரை வகுத்த பெருந்தேவனார் கூற்றான் விளங்கும். இவர் மிழலைக் கூற்றுப் பகுதியைச் சார்ந்த பொன்பற்றியைத் தலைநகராக் கொண்டு ஆண்டவர். புத்த நெறியில் நின்றவர்; வடமொழிச் சார்பினதாய இலக்கண அமைப்பினைக் கொண்ட வீரசோழியத்

தைப் படைத்தவர். பெருவேந்தன் வீரராசேந்திரன்பால் தாம் கொண்ட ஈடுபாட்டின் [2]அறிகுறியாகத் தாம் படைத்த நூலிற்கு வீரசோழியம் எனப் பெயர் இட்டார் என்பதும் வீரசோழிய நூலான் நமக்குப் புலனாகும் செய்திகள்.

இனி, இப்புத்தமித்திரனார் வாழ்ந்த பொன்பற்றி எங்குள்ளது என்பதை நோக்குவாம்.

''மிக்கவன் போதியின்மேதக்
கிருந்தவன் மெய்த்தவத்தால்,
தொக்கவன யார்க்கும் தொடர வொண்ணாதவன் தூயனெனத்
தக்கவன் பாதந் தலைமேற் புனைந்து தமிழுரைக்கப்,
புக்கவன் பைம்பொழிற் பொன்பற்றி மன்புத்த மித்திரனே!''

என்ற வீரசோழியப் பாயிரச் செய்யுளான் பைம்பொழில் பொன் பற்றி என்பதும்,

''ஈண்டுநூல் கண்டான் எழில்மாலைக் கூற்றத்துப்
பூண்டபுகழ்ப் பொன்பற்றிக் காவலனே''

என்ற வெண்பா அடிகளான், மாலைக்கூற்றத்துப் பொன்பற்றி என்பதும் சுட்டப்படுகின்ற செய்திகள், சிலர் மாலைக் கூற்றம் என்பதை மிழலைக் கூற்றெனவுங் கூறுவர். பொன்பற்றி என்னும் ஊர், தஞ்சை ஜில்லா, புதுகோட்டைத் தாலுக்காவில் உள்ளது என்பர் சிலாசாசன ஆராய்ச்சியாளர், காலஞ்சென்ற திரு. வெங் கையா அவர்கள்[3] எனவும், தஞ்சாவூர் ஜில்லா, அறந்தாங்கி தாலுகாவில் பொன்பேத்தி என்று இப்போது வழங்குகின்ற ஊர் தான், புத்தமித்திரனாரின் பொன்பற்றி'' என்பர் வித்துவான், ராவ் சாகிப். மு இராகவ அய்யங்கார் அவர்கள்[4] எனவும் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இம்மேற்கோள்களான், புத்தமித்திரனார் வாழ்ந்த பொன் பற்றி அறந்தாங்கிக்கு அண்மையிலுள்ள பொன்பேத்தியே என முடி விற்கு வருவாராயினர்.

ஆனால் பின்வரும் காரணங்களான், காரைக்காலுக்கு அண் மையிலுள்ள பொன்பற்றியே. புத்தமித்திரனார் வாழ்ந்த ஊராகும் எனத் துணிய இடமுண்டு.

(1) பிற்கால இலக்கண ஆசிரியர்களைப் பற்றிக் கூறவந்த தமிழறிஞர், இளையான்குடி காலஞ்சென்ற சு அரங்க சாமி அவர்கள் வீரசோழிய ஆசிரியரைப் பற்றிக் கூறுவது, ''நமது நாட்டார் வாய்க்காலை அடுத்துள்ள பொன்பற்றி யில் வீரசோழன் காலத்தில் அரசு புரிந்திருந்த குறுநில மன்னர் புத்தமித்திரனார்''[5]

(2) மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் தம், பௌத்தமும் தமிழும்' என்ற நூலில் குறிப்பிடும் பலவூர்கள்[6] இப் பொன்பற்றிக்கு அண்மையிலேயே அமைந்துள்ளன அவற்றைக் காண்போம்.

அ) புத்தகுடி:– சோழநாட்டில் நாகப்பட்டினத்துக்கு அருகில் இருந்த ஊர். செயங்கொண்ட சோழவள நாட்டுக் குறும்பூர் நாட்டில் இவ்வூர் இருந்ததாகக் குலோத்துங்கச் சோழனது செப்புப் பட்டயம் கூறுகிறது என்பர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள். இன்றும் இவ்வூர் இப்பெயராலேயே வழங்கப்படுகிறது; பொன்பற்றிக்கு நேர்கிழக்காக, மூன்று கி. மீ. தொலைவில் நாட்டார் வாய்க்காலின் கரையில் அமைந்துள்ளது.

ஆ) எலயனூர்:– நன்னிலம் தாலுகாவில் உள்ளதென்பர். இவ்வூரும் பொன்பற்றிக்கு பதினைந்து கி. மீ. தொலைவில் தென்மேற்றிசையில் உள்ளது.

இ) போதிமங்கலம்:– திருவிடைக்கழி என்னும் ஊரில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோயில் சாசனம் ஒன்று இவ்வூரைக் குறிப்பிடுவதாகக் கூறுகிறது. 'பௌத்தமும் தமிழும்.' இத்திருவிடைக்கழி, பொன்பற்றிக்கு வடகீழ்த் திசையில் பத்து கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது.

ஈ) சங்கமங்கலம்:– இவ்வூர், பொன்பற்றிக்கு, நேர் மேற்கே எட்டு கி. மீ. தொலைவில் நாட்டார் வாய்க்காலின் கரையிலேயே அமைந்துள்ளது. இன்றும் இப்பெயரானே வழங்கப்படுதலும் காண்க. நன்னிலம் வட்டத்தில் உள்ளது.

உ) கோட்டப்பாடி:– நன்னிலம் தாலுகாவில் அம்பகரத்தூருக்கு அண்மையில் அமைந்துள்ளது. இவ்வூரும் பொன்பற்றிக்குத் தென்மேற்கில் எட்டு கி மீ. தொலைவில் இன்றும் விளங்குதல் காண்க.

ஊ) புத்தமங்கலம்:– இப்பெயரான் ஒரு சிற்றூர், காரைக்காலுக்கு அண்மையில், மேற்றிசையில் நான்கு கி மீ தொலைவில் உள்ளது. இவ்வூரும் பொன்பற்றிக்குத் தென்றிசையில் ஆறு கி. மீ. தொலைவில் உள்ளதைக் காண்க.

இவையே யன்றிப் பெருஞ்சேரி (மாயூரம் வட்டம்) மாயூரம் (மயிலாடுதுறை), நாகப்பட்டினம் போன்ற ஊர்களும், காரைக் காலைச் சேர்ந்த பொன்பற்றிக்கு அணித்தாகவே அமைந்துள்ளன.

மற்றும், மிழலைக் கூற்றத்து வேள் எவ்வியைச் சுட்டுமிடத்து,

''யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்,
வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்''

என, அகநானூற்று இருநூற்று அறுபத்தாறாம் பாடலில் பாணர் சுட்டுவார். அந்நீடூரும், இந்நாளைய மாயூரத்திற்கு அணிமை யில் உள்ளதை நோக்க இப்பகுதியும் பொன்பற்றிக்கு அணித் தாதல் காண்க.

(3) வீரராசேந்திரனின் திருப்பெயரானமைந்த வீரசோழப் பேராறும் இப்பொன்பற்றிக்கு வடக்கில் ஆறு கி. மீ. தொலைவில் ஓடிக் கொண்டிருக்கிறது.

ஆதலின், வீரசோழிய ஆசிரியரும், வீரராசேந்திரன் காலத்து குறுநில மன்னருமான புத்தமித்திரனார் ஆண்ட பொன்பற்றி, காரைக்காலுக்கு அண்மையிலுள்ள பொன்பேத்தி என வழங்கப் பெறும் ஊரேயாகும். இன்று இவ்வூர் ஒரு சிற்றூராகச் சிறப்பேது மின்றிக் காணப்படினும், பண்டைப் பெருமை வாய்ந்த வூர் என்ப தில் ஐயமின்று. எனினும், ஆய்வாளர்கள் மேலும் ஆய்வைத் தொடரின் மேலும் பல உண்மைகள் வெளியாகலாம். அவை நம் தமிழக வரலாற்றிற்கு அணியாகும். ★ ●

சான்றெண் விளக்கம்:-

1) புத்தமித்திரனார், வீரசோழியம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1970, பக். 7.
2) மேற்படி நூல், பாயிரம்—3.
3) வேங்கடசாமி. மயிலை சீனி., பௌத்தமும் தமிழும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1972, பக். 127.
4) மேற்படி நூல், பக். 127.
5) அரங்கசாமி, இளையான்குடி. சு., குடியரசு தமிழ் ஆரம்ப இலக்கணம், அச்சிட்டோர்: ரத்னா பிரஸ், பொறையாறு, -03-02- 1944, பக். III
6) வேங்கடசாமி. மயிலை சீனி., பௌத்தமும் தமிழும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1972, பக். 43-47.

தமிழ் நூல்களில் அடிப்படைக் குறிக்கோள்கள்

முனைவர் கு. மோகனராசு,

B. SC; M. A; Ph. D; D. Anth; D. Geog; D. H. Ed Cert. skt;

1. குறிக்கோள்–

சொல்லும் பொருளும்:-

குறி என்பது பல்வேறு பொருள்களைத் தன்னுள் கொண்ட பல் பொருள் ஒரு சொல். இச்சொல்லுக்கு அடி, அடையாளம், அவை-(சபை)-, ஆண்குறி, இலக்கணம், 'இலக்கு' ஒழுக்கம், குறிப்பு, காலம், குறியிடம், தடவை, பெண்குறி, மதக்கொள்கை, நிமித்தம், நோக்கம்' என்னும் பொருள்கள் உண்டு (த. பே., பப, 1047–1048)

குறி + கொள்ளுதல் ⟶ குறிக்கொள்ளுதல்

↓

குறிக்கொள்

↓

குறிக்கோள்

(கொள்ளுதல் என்பது தொழிற் பெயர்;

கொள் என்பது முதல்நிலைத் தொழிற்பெயர்;

கோள் என்பது முதல்நிலைத் திரிந்த தொழிற்பெயர்)

குறிக்கோள் என்பதற்குப் பல்வேறு பொருள்கள் உள்ளன. ''தாய் தன் குழந்தையை வளர்ப்பதில் 'குறிக்கோளாக' இருக்கிறாள்'' என்பதில் குறிக்கோள் என்னும் சொல் 'கண்ணுங் கருத்துமாக' இருத்தல் என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது. இப்போது அவனுடைய 'குறிக்கோள்' எல்லாம் தேர்வில் முதன்மை பெறுவது'' என்னும் கூற்றில் குறிக்கோள் என்பது 'நோக்கம்' என்னும் பொருளில் வந்துள்ளது. ''அவன் வாழ்க்கையின் 'குறிக்கோள்' புகழ் பெறுவது'' என்பதில் இச்சொல், 'இலக்கு(இலட்சியம்)' என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது.

இலக்கிய வழக்காற்றில், முதன்முதலாகச் சிலப்பதிகாரத்தில் தான் குறிக்கோள் என்னும் சொல் வழங்கப்பட்டுள்ளது.

'குறிக்கோள்' தகையது கொள்கெனத் தந்தேன்

—(சிலம்பு. 30-63)

என வரும் அடியில், இச்சொல், 'நினைவில் கொள்ளத்தக்கது' என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது;

'குறிக்கோள்' கூறிப் போயினன்
(சிலம்பு. 30: 91)

என்னும் சிலப்பதிகாரத் தொடரில் இச்சொல், 'உறுதிப்பொருள்' என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது. 'அறியும் திறன்' என்னும் பொருளில் இச்சொல் வழங்கப்பட்டுள்ளதை.

என்றுணருங் 'குறிக்கோள்' இல்லா
(கம்ப. சூர்ப். 14)

என்னுந் தொடர் காட்டுகிறது.

கொன்றேன் பல்லுயிரைக் 'குறிக்கோளொ'ன்றிலாமையினால்
(திவ்விய. பெரிய 1, 9, 3)

என்னும் தொடரில் இச்சொல், 'நல்லுணர்வு' என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது. இப்பொருள்களே அல்லாமல் மன ஒருமை மேன்மைப்பாடு, யாழ் வாசினையில் கருத்தொடு செய்ய வேண்டிய பண்ணல் முதலிய தொழில்கள் என்னும் பொருள்களும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேரகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளன. (த பே., ப.1048).

2 குறிக்கோள் என்னும் பொருளுடைய பிற சொற்கள்:

குறிக்கோள் என்னும் பொருளில் இலக்கு, இலட்சியம், உலகியல் பொருள் முடிபு, உறுதிப்பொருள், ஊதியம், புருடார்த்தம், பெறுதி, பொருள், விழுமியது என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

2. 1. இலக்கு:-

இலக்கு என்பதற்குத் தமிழ்ப்பேரகராதி குறிப்பொருள், அம்பெய்யும் இலட்சியம், அடையாளம், இடம், நாடிய பொருள், எதிரி, அளவு, (தக்க) சமயம் என எட்டு வகைப் பொருள்களைத் தருகிறது (த. பே., ப. 339). இவற்றுள் நாடிய பொருள் என்பது குறிக்கோள் என்பதொடு ஓரளவு தொடர்புடையதாகும். ''ஒவ்வொரு மனிதனும் தன் இலக்கை நோக்கி முன்னேற வேண்டும்'' என்னும் தொடரில் இலக்கு என்பது குறிப்பொருளையும் குறிக்கோளையும சுட்டுதல் காணலாம்.

இலக்கினை இயம்புவது என்னும் பொருளில் இலக்கியம் என்னும் சொல்லாட்சி வழங்கப்படுவதும் கருதத்தக்கது.

2. 2. இலட்சியம் :-

இது லக்ஷ்ய என்னும் வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவ மாகும். இச்சொல், குறி, மதிப்பு என்னும் பொருள்களில் வழங் கப்பட்டுள்ளது (த. பே., ப. 340). இலட்சியவாதி, இலட்சியப் பயணம், இலட்சியப் பணி என நடைமுறையில் வழங்கப்படும் தொடர்களும் இங்குக் கருதத்தக்கவை.

2. 3. உலகியல்

பொருள் முடிபு :-

உலகியல் என்பது உலக வழக்கு, உலகநீதி (த. பே., ப. 457). என்னும் பொருள்களை உள்ளடக்கிய சொல்.

வழக்குஎனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான

(தொல். 1592)

என்பது தொல்காப்பியம். ஆகவே, உலக வழக்கு என்பது நல்லன எனச் சான்றோர்கள் வகுத்துரைத்த நடைமுறைகளையே சுட்டும் எனலாம். அச்சான்றோர்கள், மனிதன் ஒவ்வொருவரும் பெறத் தக்க முடிந்த பொருள்கள் என உயர்ந்த பொருள்கள் என குறிக் கோள் என முடிய நாட்டினவே 'உலகியல் பொருள் முடிபு'. இந்த உலகியல் பொருள் முடிபு உணரக் கூறுவதே முதுமொழிக் காஞ்சி என்னும் புறத்துறை எனப் புறப்பொருள் வெண்பாமாலை வரை யறுக்கிறது.

பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்
உலகியல் பொருள்முடி புணரக் கூறின்று

(பு. வெ. மா. 269)

என்பது அவ்வரையறை

2. 4. உறுதிப் பொருள் :-

உறுதி என்னும் சொல்லுக்குப் புருஷார்த்தம் என்னும் பொருள் உண்டு. புருஷார்த்தம் என்பது மானிடப் பயன் மதிப்புக ளான குறிக்கோள்களை உணர்த்துவது (த. பே., ப. 484).

மனிதன் வாழ்க்கையில் உறுதற்குரிய (அடைதற்குரிய) பொருளை அல்லது வாழ்க்கைக்கு உறுதிப் பயக்கும் (நன்மை பயக்கும்/செம்மை பயக்கும்) பொருளை உறுதிப்பொருள் எனலாம்.

மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான்
எடுக்கப்பட்ட பொருள்1

உறுதிப் பொருள் என்பார் பரிமேலழகர்.

2.5 ஊதியம்:-

இச்சொல் தொல்காப்பியத்திலேயே வழங்கப்பட்டுள்ளது.

'ஊதியம்' கருதிய ஒருதிறத் தானும் (தொல். 987:13)

என்பது ஊதியம் என்னும் சொல்லை உள்ளடக்கிய தொடர். இத்தொடருக்கு உரையாசிரியர்கள்

ஊதியம் கருதிய ஒருதிறனாவது ... அறத்தின்
காரணமாகப் பிரியும் பிரிவு. இது மறுமைக்கண்
பயன் தருதலின் 'ஊதியம்' ஆயிற்று[2]

என்றும்,

நூல்களாற் பெறும் பயனைக் கருதிய
ஒரு கூற்றின் கண்ணும்[3]

என்றும் விளக்கம் தந்துள்ளனர்.

பேதைமை அல்லது 'ஊதியம்' இல்லென
முன்னும் அறிந்தோர் கூறினர்'' (புறம். 28:5–6)

என்பதில் வரும் ஊதியம் என்னும் சொல்லுக்குப் பின்வருமாறு விளக்கம் தருகின்றார் பழைய உரையாளர்.

ஊதியம் என்பது அறம் பொருள்
இன்பங்களை; அன்றி அறம் என்பாரும்
உளர்[4]

அவர் ஊதியம் என்பதை வாழ்க்கையின் குறிக்கோளைச் சுட்டுவதாகக் கருதுகின்றார் என்பது தெளிவு. ''முன்னும் அறிந்தோர் கூறினர்'' எனப் புறநானூறு கூறுவதால், இப்புறநானூற்றுப் பாடல் எழுவதற்கு முன்னரே இவ்வழக்கு சமுதாய அரங்கில் இருந்தது என்பது தெளிவு.

பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் வாழ்க்கையில்
பெறுதற்கும் உறுதற்கும் உரிய
மேம்பட்ட பொருள்களை 'ஊதியம்'
என்று வழங்கி வந்தனர்''

என முனைவர் சோ. ந. கந்தசாமி கூறுவதும் இங்குக் கருதத்தக்கது.

2.6. புருடார்த்தம்:-

புருடார்த்தம் என்பது உறுதிப்பொருள் என்னும் பொருளுடைய புருஷார்த்தம் என்னும் வடமொழிச் சொல்[6] மனிதன் தன் வாழ்வில் அடைவதற்குரிய மேலான பொருள்களை — குறிக்கோள்களை இது குறிக்கும் இதற்கு 'மானிடப் பயன் மதிப்பு' என விளக்கம் தருவார் பேராசிரியர் க, த திருநாவுக்கரசு. அவர்

தன்னுணர்வோடு முயன்று, அடைந்து, அனுபவித்து
மகிழும் பயன் மதிப்புகளே மனித வாழ்க்கையை மதிப்

> புடையதாகச் செய்வன. எனவே, அவை மனித (புருஷ) மதிப்பு (அர்த்தம்) களாக — மானிடப் பயன் மதிப்புகளாகக் கருதப்படுகின்றன.[7]

என்பார்.

> வேத வல்லுநரான தாயுமான அடிகள்,
>
> புருஷர்வடி வானதே யல்லாது கனவிலும்
> 'புருஷார்த்தம்' ஏதும் இல்லேன் (தாயு. பா. 42)

எனத் தம் நிலை எடுத்துரைத்துக் கசிந்துருகுவதும் கருதத்தக்கது.

2. 7. பெறுதி:-

பெறுதி என்பதற்கு இலாபம், அடையத் தகும் பொருள் எனப் பொருள் தருகிறது தமிழ்ப் பேரகராதி (ப. 2886).

> பெறுதியை விரும்பினை ஆகுவை அன்றே
> (மணி. 25·115)

என்னுந் தொடரில் வரும் பெறுதி என்னும் சொல்லுக்குப் பேறு, ஊதியம் எனப் பொருள் தருகின்றார் ந மு. வேங்கடசாமி.[8] மனிதன் வாழ்க்கையில் பெறத் தக்க பொருள்களை — உறுதிப் பொருள்களைப் பெறுதி என்னும் சொல் குறிப்பிடுகின்றது எனலாம்.

2. 8. பொருள்:-

தொல்காப்பியம் முதுமொழிக்கு இலக்கணம் வரையறுக்கையில்,

> நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்
> எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
> குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
> ஏது நுதலிய முதுமொழி என்ப (தொல். 1433)

என்கின்றது. இதில் வரும் குறித்த பொருள் என்பதற்கு நச்சினார்க்கினியர்,

> அறம் பொருள் இன்பம் என்னும்
> மூன்றனுள் ஒன்று

என விளக்கம் தருகின்றார். அப்படியாயின், பொருள் என்பது அறம் பொருள் இன்பம் என்னும் முப்பொருளை — மும்முதற் பொருளைச் சுட்டுவது என்பது அவர் கருத்து ஆகலாம். இக் கருத்திற்கு,

> உலகியல் கூறிப் பொருள் இது
> என்ற வள்ளுவன் (கல். 4:2)

என்னும் தொடர் அரணாகின்றது.

குறிக்கோளைச் சுட்டும் இப்பொருள் என்னும் சொல்லின் அடிப்படையில் தோன்றியவையே முதற்பொருள், மும்முதற் பொருள், உறுதிப்பொருள், உலகியல் பொருள் முடிபு, முப் பொருள், நாற்பொருள் என்பன.

2. 9. விழுமியது:-

தோல் என்பதற்கு இலக்கணம் வகுக்கும் தொல்காப்பியம்,

இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோல்என மொழிப தொன்மொழிப் புலவர்
(தொல். 1494)

என்கிறது. விழுமியது என்பதற்கு 'விழுமிய பொருள்' எனப் பொருள் கொள்கிறார் இளம்பூரணர். அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருள்' என்பார் தி. சு. பாலசுந்தரம். வாழ்க்கையில் மேம்பாடு அடைதற்கான உயர்ந்த குறிக்கோளை விழுமியது என்னும் சொல் சுட்டுகிறது.

3. தமிழ் நூல்கள் காட்டும் அடிப்படைக் குறிக்கோள்கள்:-

3. 1 இருவகைக் கோட்பாடுகள்:-

வையக மாந்தர் வையத்துள் வாழ்வாங்கு வாழச் சான்றோர் வகுத்தளித்த குறிக்கோள்களை இலக்கியங்கள் இரண்டு நிலை களில் வெளிப்படுத்தியுள்ளன.





நாற்பொருள்

அறம் | பொருள் | இன்பம் | வீடு

முப்பொருள் கோட்பாடு என்பது முன்னையது; இயற்கை நெறிக் காலத்தது; நாற்பொருள் கோட்பாடு என்பது பின்னையது; சமயநெறிக் காலத்தது.

ஒன்றின் வளர்ச்சி நிலையே மற்றொன்று எனவும் கொள்ளலாம்; ஆனால், இரண்டிலும் அடிப்படை வேறுபாடுகள் உண்டு.[1]

3. 2. அறம் பொருள் இன்பம்:-

இதுவரையில் தமிழ் உலகுக்குக் கிடைத்துள்ள நூல்களுள் தொன்மை சான்றது தொல்காப்பியம். இந்நூல், அன்பின் ஐந்திணை வாழ்க்கை நெறியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் ஆடவரும் பெண்டிரும் தம் வாழ்க்கையின் குறிக்கோள்களாக அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றுபொருள்களை — முப்பொருள்களை — மும்முதற் பொருள்களைக் கைக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றது. இதனை,

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்(கு)
அன்பொடு புணர்ந்த ஐந்திணை
(தொல் 1038:1-2)

என்னும் தொல்காப்பியக் களவியல் தொடக்க அடிகளால் அறிகின்றோம்.

மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எழும் இலக்கியங்கள் ஆசிரியப்பாவாலும் அமையலாம்; வெண்பாவாலும் விளங்கலாம்; கலிப்பாவாலும் களிநடம் புரியலாம்; வஞ்சிப்பாவாலும் நெஞ்சை அள்ளலாம். இலக்கியங்கள் எப்பாவால் இயற்றப்படினும் அவை, அறம் பொருள் இன்பம் என்னும் முப்பொருள்களை உள்ளடக்கியனவாக விளங்க வேண்டும் என்பதை,

அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப
(தொல். 1363)

என்னும் தொல்காப்பிய நூற்பாவழி உய்த்துணர முடிகிறது.

தொல்காப்பியம் காட்டும் அகம், புறம் என்னும் இலக்கியக் கோட்பாடுகளின் வார்ப்படங்களாக விளங்குவன சங்கத் தொகை நூல்கள். அவை எட்டுத் தொகையும் பத்துப் பாட்டுமாம். இத் தொகை நூல்களிலும் அறம் பொருள் இன்பம் என்னும் குறிக்கோள் குறிப்பிடப்படுகின்றது.

சோழன் நலங்கிள்ளியின் செல்வம் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையும் ஆற்றும் நீர்மையது என்பதை உறையூர் முது கண்ணன் சாத்தனார்,

அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம் (புறம். 28: 15-16)

என்னும் தொடர் வழியே வெளிப்படுத்துகின்றார். இங்குச் செல்வம் வாழ்க்கையின் முதன்மைக் குறிக்கோள்களை ஆற்றப் பயன் படுகின்றது என்பதையும் தெளிவுபடுத்துகின்றார் புலவர்.

முப்பொருள் குறிக்கோள்களுள் முதன்மையாகக் கருதப்படுவது — கொள்ளப்படுவது அறம்; ஆகவேதான், தொல்காப்பியமும் 'அறமுத லாகிய மும்முதற் பொருள்' (தொல். 1363:1–2) எனத் தொகை வழங்குகின்றது. அந்த அறத்தின் வழியினதாகவே பொருளும் இன்பமும் அமைய வேண்டும் என்பதை,

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல (புறம். 31:1–2)

என உவமைவழி அமைத்துத் தெளிவுபெற வைக்கின்றார் கோவூர் கிழார்.

அறம் பொருள் இன்பம் என்னும் தொடர், கலித்தொகை (141:3), குறிஞ்சிப் பாட்டின் பின் வைப்பு வெண்பா (வெண்பா 2) ஆகியவற்றிலும் இடம்பெற்றுள்ளது.

இவையெல்லாம் சங்கப் புலவர்கள் வாழ்க்கையின் அடிப் படைக் குறிக்கோள்களாக அறம் பொருள் இன்பம் என்னும் மூன் றையே கொண்டனர் என்பதை வெளிப்படுத்துகின்றது.

சங்க இலக்கியங்களுக்குப் பின்னரும் இம்மரபு தொடர்ந்து பின் பற்றப்பட்டுள்ளது என்பதை,

ஐந்திணை மருங்கின் அறம்பொருள் இன்பம்
(சிலம்பு. நூற்கட்டுரை 4)
வடுவிலா வையத்து மன்னிய மூன்று (நாலடி. 114: 1)
அறம்பொருள் இன்பம் என்ற மூன்றினும்
(பெருங். 4:7:140)

என வரும் அடிகளால் அறிய முடிகிறது.

3. 3. அறம் பொருள் இன்பம் வீடு:-

தொல்காப்பியக் காலத்திற்கும் முந்திய காலத்திலிருந்து பெருங்கதை வரையிலும் அறம்பொருள் இன்பம் என்னும் முப்பொருள் கோட்பாடே — வாழ்வியல் குறிக்கோளே வலியுறுத்தப் பட்டன எனக் கண்டோம். இக்குறிக்கோள் விண்ணிற்கு முதன்மை தராமல், மண்ணிற்கு மட்டுமே முதன்மை தந்தது ஆகும். வையக வாழ்வை அளவாகக் கொண்டதே அன்றி விண்ணக வாழ்வை அளவாகக் கொண்டது அன்று.

இயற்கை நெறிக் காலத்தை அடுத்துச் சமய, தத்துவச் சிந்தனைகள் பெரும் வளர்ச்சியுறத் தொடங்கியதை இலக்கியங்கள் நமக்குத் தெளிவுறுத்துகின்றன. சமய, தத்துவச் சிந்தனைகள் வளர்ச்சியுற்ற காலத்தில் வீடு அடைவதே வாழ்க்கையின் உறுதி யான-இறுதியான குறிக்கோள் ஆயிற்று. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருள் கோட்பாடு முகிழ்த்தது.

இந்நாற்பொருள் கோட்பாடு முதன்முதல் கி. பி. ஏழாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் தேவாரத்தில்தான் இலக்கியத் தோற்றம் கொள்கிறது;

அறம் பொருள் வீடின்பம் (தேவா. 6905:11)

இங்கு இன்பம் என்பது பொருள் அளவில் பெரிதும் மேலாந்தன்மையைப் பெற்றுள்ளது எனலாம். தேவாரத்திற்குப் பிறகு நாற்பொருள் வழக்கு. நிலையான இடத்தைப் பெற்றுவிட்டது.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருள் நெறியை இறைவனே அடியவர்க்கு வழங்கியதாகச் சமயக் குரவர்கள் கருதுகின்றனர்.

.... ஐம்புலனும்
அழிந்த சிந்தை அந்தணாளர்க்(கு)
அறம்பொருள் இன்பம்வீடு
மொழிந்த வாயால் (தேவா. 575:4-6)

என்கிறார் திருநாவுக்கரசர்.

திருமங்கை ஆழ்வார் உலக நன்னெறிகளில் மேம்பட்டவை அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருள் நெறியே என்பதை,

அறம்பொருள் இன்பம்வீ(டு) என்றுலகில்
நன்னெறி மேம்பட்டன நான்கு அன்றே
(திவ்விய. 2764:11)

எனவரும் அடிகளால் வெளிப்படுத்துகின்றார். மேலும் அடியவர் இறைவனை நாற்பொருள் வடிவமாகவே காண்கின்றனர் என்பதனை,

அறம்முதல் நான்கவையாய் .... நின்றனை
(திருவாய். 34:5)

என்னும் தொடர் எடுத்துரைக்கின்றது.

சமய வாணர்களே அன்றி, இலக்கணிகளும் நூல் அறிவுறுத்த வேண்டுவன அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருள் களையே எனக்கொண்டனர். நூற்பயனைக் கூறவந்த நன்னூலார்,

அறம்பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே (நன். 10)
என்கிறார்.

அறம் பொருள் இன்பம் வீடென நான்கும்
என்பது சேந்தன் திவாகரம் (286) தண்டியலங்காரம் பெருங் காப்பிய இலக்கணம் வரையறுக்கையில், அப்பெருங்காப்பியம்,

நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகி (தண். 8:5)
இருத்தல் வேண்டும் என வரையறுக்கின்றது.

இவற்றால், சமயநெறிக் காலத்தில் சமயக் குரவர்களும் இலக்கணிகளும் நாற்பொருள் நெறியையே வாழ்க்கையின் அடிப்படைக் குறிக்கோள்களாகக் கொண்டனர் என்பது போதரும்.

4. திருக்குறள் காட்டும் அடிப்படைக் குறிக்கோள்கள்:-

4. 1. முப்பொருள்:-

ஒரு தனிமனிதன் முதல் நாடுவரையிலும் பல்வேறு நிலைகளில் பல்வேறு குறிக்கோள்களை வரையறுப்பது, வள்ளுவர் வாய்மொழி. மொத்தத்தில் ஒரு குறிக்கோள் களஞ்சியம் குறள் என்பது மறைக்க முடியாத மறுக்க முடியாத உண்மை ஆகும் தனிமனிதக் குறிக்கோள்கள் இதில் உண்டு; குடும்பநிலையில் குறிக்கொள்ள வேண்டிய குறிக்கோள்கள் இதில் உண்டு; சுற்றம் பற்ற வேண்டிய குறிக்கோள்கள் இதில் உண்டு; சமுதாயம் சார வேண்டிய குறிக்கோள்கள் இதில் உண்டு; நாடு நாட வேண்டிய குறிக்கோள்கள் இதில் உண்டு மனிதன் ஒவ்வொரு நிலையிலும் மேற்கொள்ள வேண்டிய குறிக்கோள்களை வரையறுப்பதையே பெரும்பான்மையும் குறள் தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது எனின் பொருந்தும்.

குறிக்கோள்களுள் குறிக்கோள்களாக — அடிப்படைக் குறிக் கோள்களாக இரு நிலைகள் உள்ளதை முன்னர் அறிந்தோம்.

வள்ளுவம் வகுத்துரைக்கும் வாழ்வியல் அடிப்படைக் குறிக்கோள்கள் யாவை என்பது அறிய வேண்டிய ஒன்று.

வள்ளுவத்தில் அறம். பொருள், இன்பம் என்னும் சொல்லாட்சிகள் பல்வேறு இடங்களில் பல்வேறு வடிவங்களில் வழங்கப்பட்டுள்ளன. ஓரிடத்தில்தான் 'வீடு' என்னும் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது (குறள். 791). அங்கும்கூட வீடு என்னும் சொல் நட்பிலிருந்து விடுபடுதல் என்னும் பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் வாழ்க்கை அறம் உரைக்கும் வள்ளுவத்தில் ஓரிடத்தில் அறம் பொருள் இன்பம்' (குறள் 501) என்னும் தொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் (குறள் 754)

என்னும் குறளில் "அற முதலாய மும்முதற் பொருட்கள்" குறிக்கப் படுகின்றன, இவற்றை நோக்கும்போது வள்ளுவர் வாழ்வின் அடிப்படைக் குறிக்கோள்களாக அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றை மட்டுமே கருதுகின்றாரோ என எண்ணத் தோன்றுகிறது. அடுத்து.

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை யிரண்டும் ஒருங்கு (குறள் 760)

என்னும் குறளில் ஒண்பொருள், எண்பொருள் ஏனை இரண்டும் என்னும் தொடர்களின் வழி எண்பொருள் — வாழ்க்கையின் அடிப் படைக் குறிக்கோள்கள் மூன்றே என வள்ளுவர் கருதுகின்றார் (அல்லது முன்னோர் கருத்தைச் சுட்டுகின்றார்) என்பது தெளிவு.

4. 2. நாற்பொருள்:-

அறம் பொருள் இன்பம் வீடு என்பது நாற்பொருள் கோட்பாடு இதனைச் சதுர்வர்க்கம் என்பர் வட நூலார். இக்கோட்பாடு கி. பி. ஏழாம் நூற்றாண்டு அளவில்தான் தமிழ் இலக்கியத்தில் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதை முன்னரே கண்டோம்.

திருக்குறளில் நாற்பொருள் எனக் கருதப்படவில்லையாயினும் வீடு பற்றிய சிந்தனைகள் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார் (குறள் 10)

பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (குறள் 350)

என்பன போலும் குறள்கள் இதற்குச் சான்றுகளாகின்றன.

குறளிலேயே நாற்பொருள் கோட்பாடு சுட்டப்படுகின்றது என்பது உரையாளர் சிலரின் கருத்து.

அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும் (குறள் 501)

என்னும் குறளுக்குப் பரிதியார்,

தன்மம், அர்த்தம், காமம், மோட்சம்
என்னும் நாலு காரியமும் விசாரித்து
யாதொரு காரியமும் செய்வான்
என்றவாறு

எனப் பொருள் தருகின்றார். காலிங்கரும்,

மறை முதலாகிய நூல் யாவற்றினும்
சொன்ன அறம் பொருள் இன்பம் வீடு
என வகுத்த நால்வகை யாகலின்
அவற்றுள் அறமாவது, பாவம் அனைத்தையும்
பற்று அறுப்பது என்றும், இருமை இன்பம்
எய்துவிப்பது என்றும், அவற்றுள் பொருளாவது,
பலவகைத் தொழிலினும் பொருள் வருமேனும் தமக்கு
அடுத்த தொழிலினாகிய பொருளே குற்றமற்ற நற்பொருள்
என்றும், மற்று இனி இன்பமாவது, கற்பின் திருந்திய
பொற்புடையாட்டி இல்லறத் துணையும் இயல்புடை
மக்களும் இருதலையானும் இயைந்த இன்பம் என்றும்,
மற்றும் இவற்றுள் உயர்ந்த வீடாவது, பேதைமையுற்ற
பிறப்பு இறப்பு என்னும் வஞ்சப் பெருவலைப் பட்டு
மயங்காது நிலைபெற நிற்கும் வீடு இது என்றும்
இங்ஙனம் இவை நான்கின் திறம் தெரிந்து ...

என்கிறார். அதாவது இவ்விரு உரையாசிரியர்களும் உயிரச்சம் என்பதற்கு வீடு எனப் பொருள் கொள்கின்றனர். இதற்கு மணக்குடவர், பரிப்பெருமாள், பரிமேலழகர் ஆகியோர் உயிரினது அச்சம் என்றே பொருள் கொள்கின்றனர் என்பதும் கருதத்தக்கது.

திருவள்ளுவமாலை ஆசிரியர்களில் பலர் வள்ளுவர் அறம் பொருள், இன்பம் என்னும் முப்பாலில், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பாலையும் அடக்கியுள்ளார் என்றே கருதுகின்றனர்.10

வீடு அடைதல் என்பதை மனித வாழ்க்கையின் இறுதிக் குறிக்கோளாக வள்ளுவம் கருதுகின்றது என்றாலும் முன்னோரை ஒட்டி 'அறம் பொருள் இன்பம்' என்னும் முப்பொருள் குறிக்கோளையே வள்ளுவம் ஏற்றுக் கூறுகின்றது எனலாம்.

குறிப்புகள்:-

01. பரிமேலழகர். உரைப்பாயிரம்,
திருக்குறள் உரைக்கொத்து— அறத்துப் பால்,
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள், 1969, ப. 1.

02. இளம்பூரணர்.
தொல்காப்பியம்—பொருளதிகாரம்—இளம்பூரணம்,
சை. சி. நூ கழகம், சென்னை, 1969, ப. 51.

03. நச்சினார்க்கினியர்.
தொல்காப்பியம்--பொருளதிகாரம்—நச்சினார்க்கினியம்,
சை. சி நூ. கழகம், சென்னை, 1970, ப 90

05. வே. சாமிநாதையர் (பதி.)
புறநானூறு மூலமும் உரையும்,
சென்னை, 1894, ப 39

04. முனைவர் சோ. ந கந்தசாமி,
திருக்குறள் கூறும் உறுதிப் பொருள்கள்,
மணிவாசகர் நூலகம், சென்னை, 1977, ப 3.

06. Any object of human persuit; any one of the four objects or aims of existence (viz. Kama, the gratification of desirer, artha, acquirement of wealth, dharma, desire of duty, moksha, final emancipation).
—Monier Williams Sanskrit English Dictionary, 1899, p 637.

07. க. த திருநாவுக்கரசு,
திருக்குறளும் இந்திய அறநூல்களும்,
மணியகம், சென்னை, 1978, ப. 13.

08. ந. மு. வேங்கடசாமி நாட்டார்,
மணிமேகலை,
சை. சி. நூ. கழகம், சென்னை, 1960, ப. 178.

09. காண்க: இக்கட்டுரையாளனின்
'திருக்குறளில் மரபுகள்' என்னும் நூல்.
சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, 1981.

10 தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனா அறமுதலா வந்நான்கு—மேலோர்க்
கூழி னுரைத்தார்.
—நக்கீரர், (தி. மா. 7: 1–3)

அறம்பொரு ளின்பம்வீ டென்னும் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவு
—மாமூலர், (தி. மா. 8:1–2)

.... பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே
—கொடித்தலை விழுத் தண்டினார், (தி. மா. 22:2-3)

இன்பம் பொருளறம் வீடென்னும் இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூன்—மன்பதைகட்
குள்ள அரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்
—நரிவெரூஉத்தலையார், (தி. மா. 33)

அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்—அறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு.
—கொடிஞாழன் மாணிபூதனார், (தி. மா. 50)

உணர்வை வளர்ப்பது தமிழே!

செந்நெல் மாற்றிய சோறும்—பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்
தன்னிகர் தானியம் முதிரை—கட்டித்
தயிரொடு மிளகின் சாறும்
நன்மது ரஞ்செய் கிழங்கு—காணில்
நாவிலி னித்திடும் அப்பம்
உன்னை வளர்ப்பன தமிழா!—உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!

பாவேந்தர்
பாரதிதாசன்

துணர் 56, மலர் 11-இல் 508-ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள செய்திக்கு மறுப்பு விளக்கமாகத் திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் எழுதிய கடிதம் அப்படியே இங்கு வெளியிடுகிறோம்.

உழக்கெண்ணெய் ஈசுவரர்

ஒரு மறுப்பு விளக்கம்

விடுநர்:

திரு. ந. ரா. முருகவேள்,
17, வரசித்தி விநாயகர் கோயில் தெரு,
சைதை, சென்னை-15

பெறுநர்:

உயர்திரு ஆசிரியர் அவர்கள்
''தமிழ்ப் பொழில்''
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி,
தஞ்சாவூர்-2.

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அய்யா,

வணக்கம். சென்ற மாதத்து 'தமிழ்ப் பொழில்' இதழில் 'உழக்கு எண்ணெய் ஈசுவரர்' என்ற தலைப்பில் ஒரு சிறு விளக்கக் குறிப்பு வெளிவந்திருந்ததனைக் கண்டேன். அவ்விளக்கக் குறிப்பு பொருத்தமுள்ளதாகத் தெரியவில்லை.

கல்வெட்டுக்கள் ஓரளவு வரலாற்றுச் செய்தியை உணர்வதற்கு நமக்குத் துணைபுரிகின்றன என்றாலும், அவைகளில் எழுத்துப் பிழைகள், சொற்பிழைகள் முதலியன அமைந்திருக்கக் காண்கிறோம். மாமல்லபுரத்தில் மகிடாசுரமர்த்தினி மண்டபத்தின் மேல் உள்ள அக்கோயிலின் பெயர், அங்குள்ள கல்வெட்டில் 'ஒலக்கண்ணேச்வரர்' என்று எழுதப்பட்டிருக்கின்றது. அந்தப் பிழையான அல்லது திரிபு அடைந்த சொல்லின் அமைப்பை, ''உழக்கு எண்ணெய் ஈசுவரர்'' என்பதாகக் கருதிக் கொண்டு ஊரில் உள்ள கடைகளில் பணம் வசூலித்து, நாள்தோறும் உழக்கு எண்ணெய் அளந்து நொந்தா விளக்கு எரித்ததனால், இப்பெயர் ஏற்பட்டதாகச் சென்ற நூற்றாண்டில் எழுதப்பட்ட ஒரு நூலிலிருந்து அறிகின்றோம்'' என்று விளக்கம் தந்திருப்பது, தவறான பொருத்த

மற்ற புனைந்துரைப் போலி விளக்கமேயாகும். உண்மையில் அச் சொல்லின் வடிவம் ''உலகக் கண் ஈசுவரர்'' என்பதே ஆதல் வேண்டும்.

கடவுள் உலகுக்குக் கண்ணாக இருக்கின்றான் என்பது, கடவுளை நம்பும் அனைவரும் ஏற்று உடன்படுகின்ற அரிய கருத்தாகும்.

கண்ணாய் உலகுக்கு நின்றாய் போற்றி,
கயிலை மலையானே போற்றி போற்றி''

என்பது, திருநாவுக்கரசர் அருளிச் செய்த திருக்கயிலாயத் திருத்தாண்டகப் பாடலில் வரும் ஒரு தொடர். இவ்வாறே ''இருபா இருபஃது'' என்னும் சைவ சித்தாந்த சாத்திர நூலின் இறுதிப் பாடலில், இறுதி வரிகளில்

''மலம்முத லாயின மாய்க்கும்,
உலக உயிர்க்கெலாம் ஒருபெரும் கண்ணே''

என்று வருவதும் இங்குக் கருதியுணரற்பாலது. இவ்வாற்றால் பெறப்படும் 'உலகக் கண் ஈசுவரர்' என்னும் பெயரே, கல்வெட்டில் கொச்சையாக 'ஒலக்கண்ணேச்வரர்' என்று பயின்று வந்துள்ளது. அதனை 'உழக்கு ண்ணெய் ஈசுவரர்' என்று கருதிக் கொண்டு, ஒருசிலர் தாமாகவே கற்பனை செய்து புனைந்துரையாக எழுதியிருப்பது, பொருத்தமற்ற பிழைக் கருத்தாகும்.

இனி இந்தப் பெயருக்கும் அக்கோயிலில் எடுத்துக்காட்டப் பெற்றுள்ள கடுகியதேர் செலாது. கயிலாயம் ஈது, கருதேல் உன் வீரம், ஒழிநீ'' என்னும் திருநாவுக்கரசர் திருத்தாண்டகத்திற்கும், எத்தகையதொரு தொடர்பும் இல்லை. திருநாவுக்கரசர் பதிகங்கள் எல்லாவற்றிலுமே, பொதுவாக அதனதன் இறுதிப் பாடலில் இராவணனைப் பற்றிய குறிப்பு அமைந்திருக்கும்.

இன்னணம்,
ந. ரா. முருகவேள்,
9—8—1983.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.
—திருவள்ளுவர்

குழந்தை மனவியலும் இலக்கியமும்

தஞ்சை பா. இறையரசன், க. மு.,

0. முன்னுரை:-

0 1. இலக்கியம் வாழ்க்கையிலிருந்து முகிழ்க்கின்றது. வாழ்க்கை, மனிதனின் மனத்தோடு தொடர்பு உடையது. 'வாழ்க்கை பொருளால் அல்ல; மனத்தால்.' என்பது காந்தியப் பொருளியல். 'மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்.' என்பது திருமூலர் சமயம் மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்' என்பது வள்ளுவர் அறவியல். ஆகவே, வாழ்வின் பல்வேறு நிலைகளும் மனத்தின் செயற்பாட்டால் அமை யும் சுருங்கக் கூறின் மனமே வாழ்வு; வாழ்வே இலக்கியம். ஆகவே, மனவியலும இலக்கியமும் தொடர்பு மிக்கன

0 2 ''மொழித்தொன்மையை உணர சிற்றூர்ப்புற மக்க ளின் பேச்சைக் கேட்கவேண்டும்; மொழித் தன்மையை உணர அம் மொழிக் குழந்தையின் பேச்சைக் கேட்க வேண்டும்' என்பது மொழி யியலார் கருத்து ஆதி மனிதனின் பண்புகளை — செயல்களை நாம் மனக்கண்ணால் உணர, இன்று நாம் குழந்தையைத்தான் அணுக வேண்டும். எனவே, இலக்கியத்தின் அடிப்படையையும் தன்மையையும் அறிய குழந்தை மனவியல் உதவும்.

1. உணர்ச்சி வடிவம்:-

1 0. போரும் காதலும் வாழ்வின் இரண்டு கூறுகள். இத னையே தமிழர் அகம், புறம் எனப் பகுத்து வாழ்விலும் இலக்கியத் திலும் மேற்கொண்டனர். தன் இனம், தன்னுயிர் என்ற நிலையே இனப்பெருக்கம், தற்காப்பு என்ற இரண்டு அடிப்படை உணர்ச்சிக ளாக உலகிலுள்ள அனைத்து உயிர்களுக்கும் அமைந்துள்ள தன் மையை மனவியலார் வெளிப்படுத்தி உள்ளனர். மனிதனது ஆறா வது அறிவாகிய மனம் தன்னுயிர், தன்னினம் என்று தன் பொருள் கள் மேல உள்ள பற்றை — அன்பை — அருளை விரிக்கின்றது; தன் இரு அடிப்படை உணர்ச்சிகளிலும் பெருக்குகின்றது. எனவே இனப்பெருக்கம் தற்காப்பு என்ற இரண்டே மனிதனின் அடிப்படை உணர்ச்சிகள்.

1 0.1 குழந்தை தன்னளவில் தற்காப்பு உணர்ச்சிமிக்கது. பசித்தால் அழுவது, வலித்தால் அழுவது, அடித்தால் அழுவது. இவை மிகச்சிறு குழந்தையின் இயல்புகள். வேண்டியன விரும்பி யன பெற அழுவது பெரிய குழந்தையின் இயல்பு; இவை தற்காப்

புணர்ச்சியின்பாற்படும். குழந்தையின் தற்காப்புணர்ச்சி பசித்தழுவதில் மட்டுமல்ல, குப்புறக் கவிழ்ந்து கொள்ள முயலும் போதும், ஊர்ந்து செல்லத் தொடங்கும்போதும், முட்டிக் காலிட்டு நடக்கும் போதும், எழுந்து நடக்கும்போதும் எச்சரிக்கை யுணர்வாக வெளிப்பாடாகிறது.

1.0.1.1. பெற்றோர், சுற்றத்தார், மற்றவர்கள் ஆகியோரைப் பார்த்துக் குழந்தை சிரிப்பது தன்னினப் பற்று காரணமாக அமைவது. தன்னினப் பற்று இனப்பெருக்க உணர்ச்சியின் காரணமாக அமைவது. இனப்பெருக்க உணர்ச்சி பாலுணர்ச்சியாய் வெளிப்படும். குழந்தைகளிடம் பாலுணர்ச்சி உண்டு என்பதை ஃபிராய்டு நிறுவுவர். இச்சான்றை நேரிய கண் கொண்டு பார்க்க வேண்டும். ஆண் குழந்தை அம்மாவையும் பெண் குழந்தை அப்பாவையும் மிகுதியும் விரும்பும்.

1.0.2. தாயாகிய இறைவியின் உடலழகைப் பத்தர்கள் பாடும்போழ்து அவர் குழந்தையுணர்வோடு பாடுகின்றார். கலைஞர்களாக மிகுதியும் ஆண்கள் விளங்கியதால் கவிதையில் — ஓவியத்தில் — சிற்பத்தில் பெரிதும் பெண்களை வியந்து நோக்குகிறார்.

1.1. குழந்தை, உணர்ச்சி மிக்கது. அடித்தவரைக் கண்டால் அவரிடம் பேசாது; ஊசி போடும் மருத்துவரைக் கண்டால் அழும். குழந்தை மனம் வளராதது; அதன் உலகம் சிறியது. ஆகவே அது அடிக்கடி அடையும் உணர்ச்சி எண்ணிக்கையில் மிகினும் அளவில் சிறிது. அதன் விருப்பு வெறுப்பு விரைவில் மாறும். ஆனால் அழுத்தமான சில நிகழ்ச்சிகளின் உணர்ச்சிகள் அறிவு வயப்பட்டு மனத்தின் ஆழத்தில் பதிந்துவிடும்.

1.2. இலக்கியம் தோன்றுவது எப்படி? கலைஞன் நிகழ்ச்சியைக் காண்கின்றான். பலர் கண்டும் காணாத உண்மையைப் பெறுகின்றான். தன் உணர்ச்சியில் குழைத்து இலக்கியம் வடிக்கின்றான். அவன் அறிவு வடிவத்துக்கும், உணர்ச்சி கருத்துக்கும் காரணமாகின்றன. அறிவு சார்ந்த உணர்ச்சி என்பது உணர்வு எனப்படும். வடிவம் எல்லோரும் கொடுக்கலாம்; அஃது அறிவின் பாற்பட்டது. உணர்வோடு நோக்கினால்தான் உண்மை புலனாகும். நியூட்டன், ஆப்பிள் விழுந்ததும் உணர்வு வயப்பட்டதால் தான் புவியீர்ப்பு விதியைக் கண்டு பிடித்தான். உணர்வு என்றது உணர்ச்சி வயப்பட்டு அறிவழிந்து நிற்கும் நிலையல்ல அறிவொடு சார்ந்த உணர்ச்சியே மனித வுணர்ச்சி; பிற விலங்குணர்ச்சி உணர்ச்சி அறிவின் எல்லையை எட்டுகிறபோது உண்மையைக்

காணும்; எல்லையைக் கடந்தால் அறிவை இழக்கும்; உண்மையை அழிக்கும். உலை அரிசிக்குக் கொடுக்கிற அடுப்பின் சூடு எல்லையை எட்டுகிறபோது சோற்றைத் தருகிறது: எல்லை கடந்தால் அரிசி அழிந்து கருகலாகும் அல்லவா? எல்லை கடக்காத சிறு நேர உணர்ச்சிகள் கவிதைகளாய்க் கருவுயிர்க்கின்றன.

2. வெளியீட்டுணர்ச்சி:—

2.1. குழந்தை, தான் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வ மிகுதியும், அறிந்தவற்றை அடுத்தவரிடம் சொல்லி மகிழும் இயல்பும் உடைத்து. 'அம்மா! இன்னிக்கி டீச்சர் நரிக்கதை சொன்னாங்க' என்று தொடங்கி பள்ளியில் நடந்த அனைத்தையும் சொல்லி முடித்தால்தான் அன்று குழந்தைக்குத் தூக்கம் வரும் குழந்தைகள், வயதானவர்கள், பெண்கள் ஆகியோரிடம் எச்செய்தியும் பெரிதும் நில்லாததற்குக் காரணம் இவ்வெளியீட்டுணர்ச்சியே.

2.2. அறிதல் — அறிவித்தல். உணர்தல் — உணர்த்தல் இவை கலைஞன் செயலாக உள்ளன 'புதினம் எழுதுவது பிள்ளைப் பேறு போன்றது',[1] 'இப்புதினத்தின் கதை என் மனத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் கருக்கொண்டிருந்தது.'[2] 'கவிதை எழுதி முடிக்கும் வரை பிரசவ வேதனை படவேண்டும்.'[3] என்றெல்லாம் கலைஞர்கள் கூறுவன வெளியீட்டுணர்ச்சியை நிறுவும்.

3. பங்கீட்டுணர்ச்சி:—

3.1. தன் மகிழ்ச்சி, அழுகை இவற்றை அடுத்தவரிடம் பங்கிடக் குழந்தை முயலும். அதுபோல அடுத்தவர் இன்பதுன்பங்களைத் தன்னதாக் கருதும். பெற்றோர் சிரித்தால் குழந்தை சிரிக்கும்; சிறிது நடிப்பாக அழுதால்கூட உடனே தானும் அழும். தாய் கவலையோடிருந்தால் சிரிக்கவைக்க முயல்கிறது குழந்தை. தாய் தன் கவலையும் மறந்து சிரித்தால் குழந்தை தானும் அச்சிரிப்பில் மீண்டும் பங்கேற்கிறது. தன்னை மீறிய நிலையில் தாய் கவனியாதிருந்துவிட்டால், குழந்தை முகம் சோர்ந்துவிடும்.

3.2. கலைஞன் பிறர் உணர்ச்சிகளைத் தன் உணர்ச்சிகளாக ஏற்கிறான். இதை ஒட்டவுணர்தல் (empathy) என்பர் இலக்கியக் கொள்கையினர்.

> ''இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
> கொன்றது போலும் நிரப்பு'' (குறள். 1048)

---

1. அகிலன், 2. ஆர். வி, 3. சுரதா

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற் றியான்'' (குறள். 1062)

என்னும்போது இரப்போனாகி அழுகிறான்; உலகியற்றுவோன் கெடுக என்று விதி (சாபம்) இடுகிறான் கலைஞன்.

4. பரிவுணர்ச்சி:-

4.1. குழந்தை, சிரிக்கின்றவர்களைக் கண்டு சிரிக்காமல் கூட இருந்தாலும் இருக்கலாம்; ஆனால் அழுகின்றவர்களைக் கண்டு அழாமல் இருக்காது. இதற்குக் காரணம் குழந்தையின் பரிவுணர்ச்சியே.

4.2 இலக்கியத் திறனாய்வாளன் இலக்கியத்தைப் பரிவோடு அணுக வேண்டும் என்பது இலக்கியக் கொள்கை. காரணம் இலக்கியக் கலைஞன் தான் காண்பவற்றைப் பரிவோடு — அருளோடு—அன்பின் விரிவோடு கண்டு இலக்கியம் படைக்கிறான் என்பதே. கலைஞனின் பரிவுக்கு இலக்காவது பெரும்பாலும் துன்ப நிகழ்வுகளே. மனித மனமே பொதுவாகத் துன்பம் உறுவோர் கண்டு பரிவுறுமேல், உணர்ச்சி மிக்கக் கலைஞன் பரிவுறாதிருப்பனோ! ஐந்திணைப் பாடல்களில் அவலச்சுவை தரும் பாலைத் திணைப் பாடல்கள் பாதிக்கு மேல் அமைந்துள்ளமைக்கும், நாடகங்களில் துன்பியல் நாடகம் சிறப்பதற்கும் இதுவே காரணம்.

5. ஒப்பீட்டுணர்ச்சி:-

5 1. ஒப்பிடுதல் குழந்தையின் இயல்பு. 'இது சின்ன கோடு; இது பெரிய கோடு.' இது குண்டு மாமா, இது மீசை மாமா' எனக் குழந்தை ஒப்பிடும். அஃறிணையை உயர்திணையாக ஒப்பிட்டுப் பேசுதல் குழந்தையின் ஒப்பீட்டுணர்ச்சியால் விளைந்த கற்பனை ஆகும். பொம்மையைக் காலில் போட்டுக் கொண்டு குளிப்பாட்டி. உணவூட்டி, பாட்டுப் பாடி உரையாடி, தாலாட்டி உறங்கச் செய்து மகிழ்தல் குழந்தையின் இயல்பு 'அப்பா! கோழி தீனி கேக்குறா', 'மணி நாய் வந்தான்' என்று உயர்திணையாக்கிப் பேசுவதுடன், 'ஆட்டுக் குட்டி! மிட்டாய் வேணுமா?, என்று கேட்டு, 'வேண்டாங்கிறியா' என்று தன்னுடன் பேசுவதாகப் பேசுகிறது குழந்தை. இதனால்தான் 'நரி பேசியது' குருவி பேசியது' எனக் கதை சொன்னால், குழந்தை அவ்வாறே கற்பனை செய்கிறது.

5.2. குழந்தை உணர்ச்சியும் சான்றோர் அறிவும் உடைய கவிஞன் ஒப்பீட்டுணர்ச்சி உடையவனே. இத்தகு ஒப்பீட்டுணர்ச்சி ஆதி மனிதனுக்கும் உண்டு. மொழி அமைவதற்கு ஒப்பீட்டுணர்ச்சி

ஒப்புமையாக்கம், போலச் செய்தல் ஆகியவற்றைக் காரணம் காட்டு கிறது மொழியியல். நகல் செய்தல்(mitation)தான் கலை' என்பர் சாக்ரடீசு. கவிஞன் ஒப்பிடுகிறான். அதுவே உவமை உருவகமாக வளர்த்துள்ளது. கவிஞன் இயற்கைப் பொருளைத் தன் மனக்கண் ணில் அகப்பொருளோடு ஒப்பிடுகிறான். கேட்குந போலவும் கிளக்குந போலவும்' அஃறிணையை உயர்திணையாகக் கருதிப் பேசுதல் கவிஞனுக்கு உரியதாகும். பூ, நாரை, கிளி, வண்டு, அன் னம், மயில், கோழி முதலியவற்றிடம் தன் துன்பம், தன் தலைவன் தன் தூது ஆகியவைபற்றி இறை பத்தர்களாகக் காதற் பித்தர்களா கப் புலவர்கள் உரையாடுகின்றனர். இயற்கையில் அறவுரை—அறி வுரை பெறுபவன் கவிஞன், 'நகுமே தோழி நறுந்தண் காரே' (குறுந்தொகை 126)என்று கார்காலம் நகுவதாய்க் காண்கிறான்; 'நிலமென்னும் நல்லாள் நகும்' (குறள். 1039) என்று நிலம் நகுவ தாகக் காட்டுகிறான்

6. இசையுணர்ச்சி -

6.1. குழந்தை பேசத் தொடங்கும்போது நீட்டி முழக்கி இசைத்து மழலை பேசுகிறது. கையால் மெல்லத் தட்டித் தாலாட்டுப் பாட குழந்தை உறங்கத் தொடங்குகிறது. இது பழக்கமானதும், பாடாமல் மெல்லத் தட்டினால், குழந்தை பாட்டை விரும்புகிறது; அதனால் 'ஆ அ அ.... ஆ அ அ' எனத் தானே இசைக்கிறது. தட்டாமல், பாடினால் மெல்லத் தட்டலை விரும்புகிறது; அதனால் கையால் மெல்லத் தன் மேலே தானே தட்டிக்கொள்கிறது. இவ்வாறு இசையும் தாளமும் இயைந்துள.

6.2. மொழி, முதலில் இசையாகத் தோன்றியிருக்கவேண் டும் என்பர் மொழியியல் அறிஞர் சிலர். பாட்டின் இசையும் தாளமும் ஆட்டம் தருகின்றன; ஆட்டம் பாட்டின் இசையும் தாளமும் தருகிறது. 'இசையின் வெளிப்பாடே கவிதை' என்பர் கார்லைல், கவிதை தாள இசை அமைந்தது. இது உணர்ச்சியின் தன்மைக்கேற்ப ஓசை அமைந்திருப்பதும், அவ்வோசையும் பாடற் கேற்ப இடத்திற்கேற்ப வேறுபடுவதும் கவிஞனின் கருத்துணர்ச்சிக் கேற்ற இசையுணர்ச்சியைக் காட்டும்.

7. கற்பனை உணர்ச்சி:-

7.1.1 குழந்தை உறங்குகின்றது. உறக்கத்திலேயே சிரிக் கின்றது; சிலசமயம் அழுகின்றது. விழித்திருக்கும்போது நடந்த நிகழ்வுகளே உறக்கத்தில் நினைவலையின் கற்பனைகளால் கனவுக ளாக உருக்கொள்கின்றன. குழந்தை காணும் கற்பனைக்கனவு உறக்கத்தில் மட்டுமல்லாமல் விழிப்பிலும் கூட சிலசமயம் நிகழ்கிறது

தன்னை ஆசிரியையாகக் கற்பித்துக்கொண்டு எதிரே குழந்தைகள் இருப்பதாகப் பேசும். குழந்தை வெளியுலகில் கண்டது கொண்டே கனவுக் கற்பனைக் காண்கிறது.

7.1.2. கலைஞன் தான் கலைக் கருவுற்ற காலத்தில் தன்னுலகிலேயே இருப்பான். தன் மனத்தில் தோன்றும் உலகையே அவன் வெளியுலகில் காணும் உலகமாகக் காட்டுகிறான். கம்பன் தான் கண்ட கனவுலக நாட்டை அயோத்தியாகப் படைத்தான். எதுவும் நெருப்பின்றிப் புகையாது. கம்பர் தான் கண்ட சோழ நாட்டை அடிப்படையாகக் கொண்டே தன் கனவுலக நாட்டைக் கண்டான்.

7.2.1. செப்புகளை வைத்துக்கொண்டு குழந்தைகள் சமையல் செய்து விளையாடும்போது வெறும் பாத்திரங்களில் சோறு குழம்பு இருப்பதாகக் கருதி உண்பதாக நடிப்பதோடு, நம்மையும் உண்ணச் சொல்லும்! இவையும் அப்பிஞ்சு உள்ளங்களின் கற்பனையே! பாத்திரங்களின் சிறு வடிவமாகிய செப்புகள் உள்ளன; ஆனால் பாத்திரங்களில் இருக்கவேண்டிய சோறு, குழம்பு இல்லை. அதற்கு மாறாகச் செம்மண், இலைதழை இருப்பதுண்டு. தொடர்புடையவற்றுள் ஒரு பொருள் இருப்ப, மற்றொன்று இல்லாதிருப்பவும் அல்லது தொடர்பற்ற பிறிதொன்று இருப்பவும் தொடர்புடைய மற்றொன்று இருப்பதாகக் காணுதல் குழந்தையின் கற்பனை.

7.2.2. பூ இருக்கிறது, தலைவி இல்லை; தலைவி இருப்பதாக எண்ணி மகிழ்தல் காதலர் இயல்பு தலைவியின் ஊடலுக்குக் காரணம் வேண்டும் ஊடலுக்கான தேவை இருக்கிறது; காரணம் இல்லை! ஆகவே காரணம் இருப்பதுபோல் கருதி–கற்பித்து–கற்பனைசெய்து ஊடுகிறாள் தலைவி! தும்மினால் பிறிதொருவர் நினைந்திருக்க வேண்டும் நினையாதிருக்கவே தும்முகிறான் தலைவன். நினைந்ததாகக் காரணம் கற்பித்து ஊடுகிறாள் வள்ளுவத் தலைவி,

7.3.1. குழந்தை வைத்திருந்த பொம்மை உடைந்துவிட்டது. முகம் சோர்ந்துவிடுகிறது; அழவும் செய்கிறது. அடுத்த நாள் விளையாடப் புறப்பட்டதும் பொம்மை உடைந்தது நினைப்புக்கு வருகிறது. முகஞ்சோர்கிறது; 'பொம்மை வேண்டும்' என்று அழுகிறது. அப்பா சொல்கிறார் 'இன்று சாயுங்காலம் குண்டுமாமா உன்னைப் பார்க்க வருகிறாராம்' குழந்தை முகம் மலர்கிறது; சிரிக்கிறது, 'அன்னிக்கி மிட்டாய் தந்தாரே! அன்னிக்கு சைக்கில்ல என்னை சுத்துனாரே!' என்கிறது குழந்தை இன்று இல்லை;

நேற்று—அதன் முன்பு இருந்ததை—நடந்ததை எண்ணி இன்று அழுகிறது—சிரிக்கிறது குழந்தை.

7.3.2. 'முந்திய உவா நாளில் அப்பாவுடன் இருந்தோம்; இந்த உவாவில் அப்பா இல்லை !' என்ற கையறு நிலைப்பாட்டு முழு நிலவைப் பார்த்துவந்த பழநினைவின் வெளிப்பாடு. 'யான் சிறுவனாக இருந்தபோது 'தொம்' என உயரத்திலிருந்து நீரில் குதித்து நீந்தினேன் ! என்று தன் இளமை நினைகிறார் முதிய புலவர்.

7.4.1 அப்பா அன்றொரு நாள் அம்மாவை அடித்தார், தன் எழுதுகோலை உடைத்ததற்காக. அம்மா இன்று தன்னை அடித்துவிட்டார் என்று குழந்தைக்கு வருத்தமும் சினமும். அப்பா வந்ததும் அம்மாவுக்கு அடிவாங்கித்தர எண்ணியது குழந்தை. அப்பா வந்தார். குழந்தை, 'அப்பா! அம்மா... பேனா... ஒச்சு.' (பேனாவை உடைத்துவிட்டது) என்று கூறி ஒரு நல்ல உடையாத எழுதுகோலை எடுத்துக் காட்டுகிறது என்னே குழந்தையின் கற்பனை !

7.4.2. ஒன்றன் நிகழ்ச்சியை அடுத்ததில் ஏற்றி உரைக்கும் கற்பனை கவிஞனுக்கும் உண்டு ஒரு நாள் தேங்காயில் நார் உரிப்பது கண்டான் கவிஞன். இன்று தேங்காய் இல்லை; கல் இருக்கிறது. அக்கல்லிலும் நார் உரிக்க வேண்டும். இது கவிஞன் விருப்பம்.

'கல்நார் உரித்தென்ன என்னையுந்தன் கருணையினால்
பொன்னார்கழல் பனித்தாண்டபிரான்' — திருவாசகம்

இறைவன் இன்னும் ஆண்டானில்லை; ஆண்டதாகக் கூறுகிறான் கவிஞன். விடுதலை இன்றே பெறக் காரணங்களில்லை; பெற்றுவிட்டோம் என்றே – 'ஆனந்த சுதந்திரம்' அடைந்துவிட்டோம் என்றே – களிக்கிறான் கவிஞன்.

8. ஒருமைப்பாடு:-

8.1. குழந்தைகள் 'அப்பா – அம்மா' விளையாட்டு விளையாடுகின்றன. அப்போது, அடுத்து யாரிருந்தாலும் அவை கவலுறாது கவனியாது தாம் அப்பாத்திரங்களில் ஒன்றிவிடுகின்றன.

8.2. தான் சமைக்கும் பொருளில் தான் ஒன்றலே, செய்யும் பொருளில் சிறப்பை நல்கும். 'என் பாத்திரங்களை நான் ஆள்வதில்லை; அவையே என்னை ஆளுகின்றன' என்று தேக்கரே என்ற மேனாட்டுப் புதின ஆசிரியர் கூறுகின்றார். 'தன்னை மறந்தலயம் தன்னிலிருந்தேன்.' என்கிறார் பாரதியார்.

9. தொடர்பு விதி:-

9.0. காலம், இடம், சூழல் ஆகியவை உலகின் செயல்க ளோடு தொடர்புடையன. இதனால் உலகச் செயல்கள் அனைத்தும் தொடர்பு விதியினால் (Relative Theory) காணற்குரித்து.

9.1. குழந்தை படுத்திருக்கிறது ஒரு பாம்பு, ஒரு தேள், ஒரு பூரான் என நான்கைந்து நாட்களில் ஒவ்வொன்றாகக் குழந்தை யருகே வந்ததுமே அடிக்கப்பட்டன. இன்னும் என்ன நேருமோ எனப் பெற்றோர் கவலையுடன் குழந்தை அருகே உட்கார்ந்திருக் கின்றனர். குழந்தையோ சிரித்து விளையாடுகிறது. தம்முடைய ஒரு சில உணர்ச்சிகள் பாதிக்கப்பட்டால் தவிரக், கவிஞனும் குழந் தையும் தம் நிலையினின்றும் பிறழார்.

9.2. வீட்டில் பல நாளாகச் சோறில்லை. மனைவியும் பிறரும் வருத்தத்தோடு இருப்பினும் கவிஞன் தன் உணர்ச்சி நிலை யில் இருக்கின்றான். அடுத்த வேளை உணவுக்கு அரிதின் கிடைத்த அரிசியைக் குருவிக்கு இறைத்து, 'காக்கை குருவி எங்கள் சாதி' எனப் பாடுகிறான் கவிஞன். பாம்பு அச்சத்திற்குரியதுதான்; ஆனால் அது விளையாட்டுப்பொருளாகத் தோன்றுகிறது குழந் தைக்கு. தீ சுடுவதுதான்; ஆனால் அது இறைவனைத் தீண்டும் இன்பந் தருவதாகத் தோன்றுகிறது கவிஞனுக்கு. இது அவரவர் சூழல், உணர்வு வேறுபாட்டால் அமைவது. தொடர்பு விதியால் மேற்கண்டவாறு காணினல்லது கவிஞனின் குழந்தை உணர்ச்சிகள் புலனாகா.

10. புதுமை ஏக்கம்:-

10.1. கிடைத்த பொருளைவிடக் கிடைக்காத பொருளுக்கு ஏங்குவதும் புதிய பொருள்களை விரும்பும் அதே நேரத்தில் புதியவர் களைக் கண்டு மருளுவதும், எல்லோரையும் சமமாகக் கருதுவதும் ஆகியன குழந்தை இயல்புகள்.

10.2. ஏக்கமும் துன்பமும் கவிஞனின் பெரும் படைப்பு களுக்கு அடிப்படை. சொல்புதிது சுவை புதிதாய்ப் பாக்களைப் படைக்கும் அதே நேரத்தில் மிகப் புதிய உத்திகளை, அவனுக்குப் புதிதாகிய புறவுலகினரை, புதிய (அறிவியல் முதலிய) வளர்ச்சி களைக்கண்டு மருளுகிறான், மனித இனத்தைச் சமமாகப் பார்க்கும் அன்பும் அருளும் உடையவனாய் இருக்கிறான்.

11. சொல்லும் பொருளும்:-

11.0 இலக்கணம் சொற்பொருளை உணர்த்தும். இலக்கியம் சொல்லுக்குப் புதிய பொருளை, பொருளுக்குப் பொருளைத் தரும்.

11.1. குழந்தை தன் வீட்டில் கோழி வளர்ப்பதால், 'கோழி' என்ற சொல்லையும் கோழியையும் நன்கறியும். ஒரு நாள் 'அம்மா! கறுப்புக் கோயி! கறுப்புக் கோயி!' என்று துள்ளியது குழந்தை. அம்மா எட்டிப் பார்த்தார். அது ஒரு காக்கை! கறுப்பு, கோழி என்ற இரண்டு பழைய சொற்களைப் புதிய பொருளுக்கு உருவாக்கி அப் புதிய சொல்லைப் பழைய பொருளுக்குப் பொருள் தரச் செய்கிறது குழந்தை.

11.2 பொன், வளையல் இரண்டும் வெவ்வேறு பொருள்கள் பொன், தொடி என்னும் அப்பொருள் குறிக்கும் இரண்டு சொற்களைப் பொற்றொடி எனச் சேர்த்துக் கவிஞன் புதிய சொல்லை வழங்குகிறான்; அவன் தந்த புதுப் பொருள், பெண்!

12. முடிவுரை:-

12.0. குழந்தை முழு வாழ்க்கையின் தொடக்க நிலையின் முதற்படியில் உள்ள தன்மையால், வாழ்க்கை உணர்ச்சிகள் நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் முழுத் தொகுதியாக — கரவற்ற வெளிப்பாடாக அமைவதால் வாழ்வின் பல துறைகட்கும் சான்றாகிறது. மனவியல், உடலியல், மொழியியல், மானிடவியல். மருத்துவம் முதலிய பல துறைகளைப் போல இலக்கியத்துக்கும் குழந்தை தோற்ற மூலமாக – சான்றாக அமைகிறது காதலர், பித்தர், ஆதிமனிதர் முதலிய மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் கவிஞனுக்கும் குழந்தை சான்றாகிறது குழந்தை ஒரு சிறிய உலகம்! குழந்தை மனம் கலைஞன் மனத்தோடு ஒத்தது. எனவே குழந்தை மனவியல் இலக்கிய மனவியலைத் தருகிறது. சுருங்கக் கூறின், குழந்தை ஓர் இலக்கியம்! கவிஞன் ஓர் குழந்தை! ✱●

இற்றை நாளில் வழங்கப் பெறுவது

அடியார் என்ற சொல் இந்நாட்டில் மிகவும் பழக்கப்பட்ட ஒரு சொல். சமய வேடம் தாங்கியவர்கள் பலரையும் குறிப்பதற்கு இச் சொல் பயன்படுகிறது. பல சமயங்களில் அவர்களை எள்ளி நகையாடவும் பயன்படுகிறது. ஒரு சமயத்தைச் சார்ந்து, அச்சமயத்தினர் குறிக்கும் ஒரு பெயர் தாங்கிய கடவுளுக்குத் தொண்டராக இருப்பதனையே அவர்களுடைய வேடம் குறிக்கிறது. தொண்டர் என்ற சொல்லுக்கும் அடியார் என்ற சொல்லுக்கும் பொருளால் ஒன்றும் வேற்றுமை இல்லை. என்றாலும் ஒரு சொல் நகைப்பதற்கு உரியதாகவும், மற்றொன்று மரியாதைக்கு உரியதாகவும் இற்றை நாளில் வழங்கப் பெறுவது விந்தையே!

—அ. ச. ஞானசம்பந்தன்,

மொழி நிகண்டுகள் மொழியும் தொகைப் பெயர்கள்

—'அறிவன்'—
மா. சற்குணம் எம். ஏ.,

தமிழ் நிகண்டுகள் மொழியின் சொற்களுக்குப் பொருள் கூறுவனவாகப் பொதுவாகவும், மருத்துவம் கணியம் (astrology) போன்ற துறைகளில் உள்ள கலைச் சொற்களுக்குப் பொருள் கூறுவனவாகச் சிறப்பாகவும் தோன்றியுள்ளன. அவற்றுள் மொழி நிகண்டுகள் முப்பெரும் பிரிவுகளின் அடிப்படையில் சொற்களை வகைப்படுத்திப் பல தொகுதிகளில் அவற்றுக்குரிய பொருள்களைத் தந்துள்ளன. ஒரு பொருள் குறித்த பல பெயர்ச் சொற்கள், பல் பொருள் குறித்த ஒரு பெயர்ச் சொற்கள், பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்ச் சொற்கள் என்பனவே அம்முப்பிரிவுகள். இவற்றுள் மூன்றாவது பிரிவில் அமைந்த சொற்களை இக்கட்டுரைத் தலைப்பில் தொகைப் பெயர்கள் எனச் சுட்டப்பெறுகின்றன. அத் தொகைப் பெயர்ச் சொற்கள் மொழி நிகண்டுகளில் இடம் பெற்றுள்ள வாற்றை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்கள் ஒரு பொதுத் தலைப்பின் கீழ் அடங்குமாறு அமைகையில் அவற்றை எளிதில் நினைவில் வைத்துக்கொள்ளற் பொருட்டும், அவை இத்தனை என வரையறுத்துச் சுட்டுதற் பொருட்டும் அவற்றை ஒரு தொகைச் சொல்லால் குறிப்பது மரபு. ஞாயிற்றையும் திங்களையும் இருசுடர் எனக் குறிப்பதும், இறப்பு நிகழ்வு எதிர்வு இவற்றை முக்காலம் எனச் சொல்லுவதும், கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகியவற்றை நாற்றிசை எனச் சுட்டுவதும் இவைபோல்வனவும் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்ச் சொற்கள் என்ற தலைப்பில் நிகண்டுகளில் இடம் பெற்றுள்ளன. பல பொருள்களின் கூட்டம் ஒரே பெயரால் தொகுத்துச் சுட்டப் பெறுவதால் இவற்றைத் தொகைச் சொற்கள் எனவும் குறிக்கலாம். இவ்வாறு பொருள்களைத் தொகையாக ஒரே பெயரால் சொல்வது தொல்காப்பிய காலத்திலேயே இருந்து வந்துள்ளது.

தொல்காப்பியத்தில் இருதிணை, மூவுயிர், நான்மொழி, ஐந்நிலம், ஆறறிவு முதலியன போன்று பல சொற்கள் எடுத்தாளப் பட்டுள்ளன.[1] சங்க இலக்கியங்களிலும் இதனைக் காணலாம்.

திருக்குறளில் இரண்டு முதல் எட்டு வரையிலான தொகைப் பெயர்கள் சுமார் ஐம்பதுக்குமேலான இடங்களில் குறிக்கப் பெற்றுள்ளன.

நிகண்டுகள் சொற்பொருள் கூறுதற்கெனவே தோன்றியவாதலின் அவை தொல்காப்பியம் முதலிய நூல்களில் காணப்பட்ட தொகைப் பெயர்களை ஆராய்ந்து சேர்த்துக்கொண்டு அவற்றுக்கும் பொருள் உரைக்கத் தலைப்பட்டன. சில நிகண்டுகள் இத்தொகைப் பெயர்களையெல்லாம் எண்ணிக்கை அடிப்படையில் நிரல்படுத்தி தனி இயலின்கீழ் விளக்கியுள்ளன. ஆயினும் பல நிகண்டுகள் இவற்றுக்குத் தனி இயல் அமைக்காது பிற இயல்களினூடேயே பொருள் வகை அமைப்பு முறைகட்கு ஏற்றவாறு கூறிச் சென்றுள்ளன. அவற்றை இனி ஆராய்வோம்.

தமிழில் தோன்றிய முதல் நிகண்டாகக் கருதப்பெறும் திவாகரம் தொகைப் பெயர்களையெல்லாம் 'பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' எனும் (12 ஆவது) இறுதித் தொகுதியின் கண் இடம்பெறச் செய்துள்ளது. அத் தொகுதியில் ஒன்று முதல் பன்னிரண்டு வரையுள்ள எண்களுக்கும் பின்னர் பதினெட்டு, இருபத்தைந்து, இருபத்தெட்டு, முப்பத்திரண்டு, முப்பத்துமூன்று, தொண்ணூற்றாறு ஆகிய எண்களுக்குமான தொகைப் பெயர்களை திவாகரர் விளக்கியுள்ளார். இத் தொகுதியில் நூற்று முப்பத்து ஒன்று தொகைப் பெயர்கள் விளக்கப்பெற்றுள்ளன.

இவற்றுள் பல சொற்கள் இவர் காலத்துக்கு முந்தைய நூல்களில் குறிக்கப் பெற்றனவே. தம் கால வழக்கையொட்டியும் ஆசிரியர் புதிதாகப் பல சொற்களைச் சேர்த்துரைத்துள்ளார். இத் தொகைச் சொற்களை ஒன்று என்னும் சிற்றெண் முதல் தொண்ணூற்றாறு எனும் பேரெண் ஈறாக நிரல்படக் கூறியுள்ளார். ஒன்று என்பதையும் தொகைப் பெயர்களில் ஒன்றாகச் சேர்த்துள்ளமையை ஆராய்ந்தால் அது இனைத்து என வரையறுத்துச் சுட்டுதற் பொருட்டே சேர்க்கப் பெற்றிருக்கும் என்று தோன்றுகிறது. இத் தொகுதியில் பல பெயர்களின் வகைகளுக்கு விளக்கந் தந்திருப்பது சிறப்பாகவுள்ளது. தொகுதியின் இறுதியில் உள்ள பல நூற்பாக்கள் தலைப்புக்கு ஏற்றனவாக இல்லை. இவை வேறு எப்பகுதிக்கேனும் உரிய நூற்பாக்களாக இருந்து ஓலைச்சுவடிகளில் இடம் மாறியிருக்குமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. நூலாசிரியர் தமது வகைப்பாடுகளுக்குள் அடங்காத பொதுவான சொற்களைத் தொகுத்து இறுதியில் சேர்த்திருக்கலாமோ என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

தொகைப் பெயர்களில் சேர்க்கப்பட வேண்டியனவாகிய பல செய்திகள் இத் தொகுதியில் விடப்பட்டுள்ளன.

''கூறியது கூறினும் குற்றமில்லை
வேறொரு பொருளை விளக்குமாயின்''

என்று இத்தொகுதியின் தொடக்கத்திலேயே கூறிய திவாகரர்

முன் இயல்களில் கூறப் பெற்றனவாகிய பண்வகை நான்கு, பருவங்கள் ஆறு, இசை ஏழு, பூசல் வகை முப்பத்து நான்கு முதலான பல தொகைப் பெயர்களை இவண் கூறாது விடுத்தது குறையாகவே தோன்றுகிறது. இவ்வாறு சில குறைபாடுகள் காணப் பெறினும் திவாகரம் முதல் நிகண்டு என்ற அளவில் அதற்குரிய பல சிறப்புகளுடன்தான் திகழ்கிறது. தொகைச் சொற்களுக்கு தனித் தொகுதி அமைத்தமை, அதில் பல்வேறு தொகைப் பெயர்களையும் தொகுத்து சிற்றெண் முதலாகப் பேறெண் ஈறாக நிரல் படுத்தியமை, அவற்றுள் பலவற்றுக்கு இடையிடையே தனி விளக்கங்கள் தந்து பொருண்மையைத் தெளிவுபடுத்தியுள்ளமை போன்றவற்றை அதன் சிறப்புகளாகச் சுட்டலாம்.

திவாகரத்துக்குப் பின் எழுந்த நிகண்டாகப் பிங்கலந்தை கிடைத்துள்ளது. இந்நிகண்டில் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி இடம் பெறவில்லை என்பது சிலர் கருத்து[2] ஆயினும் இக்கருத்து ஐயப்பாடுடையது எனக் கருதுவர் வேறு சிலர்[3] இந்நிகண்டு தொகைப் பெயர்களுக்குத் தனிஇயல் ஒதுக்காவிடினும் பிற பிரிவுகளில் அச்செய்திகளைப் பேசாமல் இல்லை. அவற்றுள் ஐயர்வகை எனும் பிரிவில் மட்டும் அதிகமான தொகைப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அதன்கண் ஒன்று முதல் பத்து வரையிலும் பின்னர் பன்னிரண்டு, பதினெட்டு ஆகிய எண்களுக்கு உரிய தொகைச் சொற்களும் பொருள்விளக்கம் பெற்றுள்ளன. தலைப்புக்குப் பொருந்தாத பல தொகைப் பெயர்களும் இடம் பெற்றுள்ளமையால் இத்தொகுதி குறைபாடுடையதாகத் தோன்றுகிறது. இத்தலைப்புக்கும் இருவினை, முச்சுடர், நாற்கவி, ஐம்பால் வகை, அறுசுவை முதலான பல சொற்களுக்கும் இயைபில்லை என்பது வெளிப்படை. எனினும் இப்பிரிவில் மட்டும் மொத்தம் தொண்ணூற்று ஆறு தொகைச்சொற்கள் குறிக்கப் பெற்றுள்ளன. இவை தவிர சுமார் வேறு எழுபது தொகைச்சொற்கள் நூலின் பிற பகுதிகளில் விளக்கப் பெற்றுள்ளன.

இந்நூலாசிரியர் சில இடங்களில் திவாகர நூற்பாக்களை அப்படியே கையாண்டுள்ளமையும் சில நூற்பாக்களில் சொற்களை மட்டும் ஓரளவு மாற்றிக் கையாண்டுள்ளமையும் காண முடிகிறது[4]

திவாகரர் சொன்ன சில தொகைப் பெயர்களை விடுத்து மண்டல புருடர் புதிதாகச் சிலவற்றை இணைத்துக் கூறியுள்ளார். மேலும் திவாகரர் வெறுமனே கூறிச் சென்ற சில தொகைப் பெயர் வகைகளை இவர் மேலும் விளக்கியுள்ளார். இவ்வாறு பிங்கல நிகண்டு திவாகரத்தை விட அதிகமான தொகைப் பெயர்களைக் குறிப்பதிலும், தொகைப் பொருள்களை விளக்கிக் காட்டுவதிலும் சிறந்து நிற்கிறது.

இவற்றையடுத்துத் தோன்றிய நிகண்டாகக் கருதப்படுவது சூடாமணி நிகண்டு. இதன் பன்னிரண்டாவது இறுதித் தொகுதியில் தொகைப்பொருள் வகைகள் விளக்கப் பெற்றுள்ளன. இதிலும் ஒன்று முதல் பத்து, பின்பு பன்னிரண்டு, பதினெட்டு, இருபத்தொன்று, இருபத்தைந்து, இருபத்தெட்டு, முப்பத்தொன்று, முப்பத்திரண்டு ஆகிய எண்களுக்குரிய தொகைப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. சில தொகைப் பெயர்களைக் குறிப்பதில் இது பிங்கலந்தையை அப்படியே முறை மாறாது பின்பற்றியுள்ளதைக் காண முடிகிறது. இருவகைக் கூத்து, மூவகைப் பழம் போன்றவற்றைப் புதிதாய்ச் சேர்த்துள்ளது. பிங்கல நிகண்டில் கூறப்பெற்ற தொகைச் சொற்களின் விளக்கத்தைக் காட்டிலும் சூடாமணியின் பன்னிரண்டாம் தொகுதியில் விளக்கப் பெற்ற தொகைச் சொற்கள் எண்ணிக்கையில் குறைவானவையே ஆயினும் மாறாக அதிக எண்ணிக்கையில் கூறியுள்ளது என்பர் சிலர்.[5]

இவற்றையடுத்துத் தோன்றிய தமிழ் நிகண்டுகள் சிலவற்றில் பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி இடம் பெற்றுள்ளது. குறிப்பாக உரிச்சொல் நிகண்டு, பாரதி தீபம் ஆகியவற்றில் இத்தொகுதியைக் காண முடிகிறது.

கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காங்கேயர் என்பவரால் செய்யப் பெற்ற உரிச்சொல் நிகண்டு இருநூற்று எண்பத்தேழு வெண்பாக்களால் ஆனது. பல்பொருட்கொரு பெயர்த் தொகுதி மட்டும் முப்பத்தேழு வெண்பாக்களால் அமைந்துள்ளது. இத்தொகுதி காங்கேயரால் எழுதப்பட்டதல்ல. இதை வேறு யாரோ ஒருவர் எழுதிச் சேர்த்துவிட்டார் என்ற ஒரு கருத்தும் உண்டு.[6] இதனை விடுத்து இத்தொகுதியில் உள்ள சொற்களைப் பற்றி மட்டும் ஈண்டு சிந்திப்போம்.

இதன்கண் நாற்பத்தாறு தொகைப் பெயர்களே விளக்கப் பெற்றுள்ளன. இதற்கு முந்தைய நிகண்டுகளில் இடம்பெற்ற சொற்களின் அளவில் சுமார் காற்பகுதியே இவண் சுட்டப் பெற்றமை கவனிக்கத் தக்கது. பல சொற்கள் அவர் காலத்திலிருந்தும்

ஏனோ மிகச் சிலவற்றுக்கே விளக்கம் தந்துள்ளார். சான்றாக இரண்டு என்ற எண்ணின் தொகைப் பெயர்ச் சொற்களாகத் திவாகரம் இருமை, இருவினை, இருவகைத் தோற்றம், இருவகையறம், இருவகைக் கந்தம், இருசுடர், இருமரபு, இருவகைப் பொருள், இருவகை இன்பம், இருவகை வீடு ஆகிய பத்துச் சொற்களைக் குறிப்பிடுகிறது. சூடாமணி நிகண்டு இவற்றுள் இறுதி இரண்டையும் விடுத்து இருவகைக் கூத்து என்ற ஒன்றைச் சேர்த்து ஒன்பது தொகைச் சொற்களைக் குறிக்கிறது. பின் வந்த பிங்கலந்தை பன்னிரண்டு சொற்களைக் குறிக்க உரிச்சொல் நிகண்டு மட்டும்.

'மறுமையோடு இம்மை என்றாகும் இருமை'

என்று ஒரோ ஒன்றை மட்டும் குறித்திருப்பது வியப்பாகவுள்ளது இவற்றைக் கொண்டு சிந்தித்தால் தாமும் பெயரளவிற்கு நிகண்டு ஒன்றைச் செய்யவேண்டுமென்பதற்காகவே காங்கேயர் மனப்பாடம் செய்ய எளிதாகுமாறு வெண்பா யாப்பில் உரிச்சொல் நிகண்டைச் செய்திருப்பாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் திருவேங்கடபாரதி என்பவரால் இயற்றப்பட்டது 'பாரதி தீபம்' என்னும் நிகண்டு. இவர் எழுநூற்றுமுப்பத்தேழு கலி விருத்தங்களில் பதின்மூவாயிரம் சொற்களுக்குத் தம் நூலில் பொருளுரைத்துள்ளார். இதில் ஆசிரியர் இறுதி இயலாகிய பல்பொருட்கூட்டத்து ஒருபெயர்த் தொகுதியில் சுமார் நூறு தொகைச் சொற்களுக்கு விளக்கம் தந்துள்ளார் இத் தொகுதியில் ஒன்று என்பதற்கான தொகைப் பெயரே சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது நினைவிற் கொள்ளத்தக்கது.

இத் தொகுதியின் இறுதியில் உள்ள பதின்மூன்று பாடல்கள் தலைப்புக்குப் பொருத்தமான செய்திகளைக் கொண்டனவாகவோ நிரல்படவோ அமையவில்லை.[7] இவற்றுக்கு முன் உள்ள பாடல்கள் எல்லாம் இரண்டு—பத்து, பன்னிரண்டு, பதினெட்டு ஆகியவற்றுக்கான தொகைப்பெயர்களை மட்டும் முறையாக விளக்குவனவாக அமைந்துள்ளன. இடையில் மூன்று பாடல்கள் கிடைக்கவில்லை.

இவ்வாறு தொகைப்பெயர் விளக்கங்கள் பன்னிரண்டாம் தொகுதியாக அமைந்து வளர்ச்சிபெற்ற காலத்தில் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கம் முதலாக ஆசிரியர்கள் சிலர் மொழி நிகண்டுகளின் ஓரிரு பிரிவுகளை மட்டும் விளக்கும் வகையில் தனி நிகண்டு நூல்கள் சிலவற்றைச் செய்வாராயினர். இவ்வகையில் தொகைப் பெயர்களை விளக்குவனவாகத் தோன்றிய நிகண்டுகள் சில உள.

கி. பி பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஈசுரபாரதி என்பவரால் இயற்றப்பட்டதாக பல்பொருள்சூடாமணி என்ற நிகண்டு கிடைத்துள்ளது. இந்நிகண்டில் பல்பெயர்க்கூட்டத்து ஒருபெயர்க்காண்டம் என்ற தலைப்பிலான இறுதிப் பகுதியில தொகைப் பெயர்களின் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இது தொகைப் பெயர்களின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்ததைப் புலப்படுத்துகிறது.

கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டினதாகவே கருதப்படும் 'பொருள் தொகை நிகண்டு' என்பதை எழுதியவர் சுப்பிரமணிய பாரதி என்பவராவார். ஆயிரம் நூற்பாக்களுடன் இந்நூல் காணப் படுகிறது. இதில் சில நூற்பாக்கள் பின்னர் யாராலேயோ எழுதிச் சேர்க்கப்பட்டவை என்ற கருத்தும் உண்டு.[8] ஆயினும் நூல் முழுவதும் தொகைப் பெயர்களின் தனிப் பிரிவு மட்டுமே அமைந்து விளக்கம் பெற்றுள்ளது. இதன்கண் ஒன்று—பதினாறு. பதினெட்டு, இருபது, இருபத்தொன்று, இருபத்திரண்டு, இருபத்துநான்கு, இருபத்தைந்து. இருபத்தேழு, இருபத்தெட்டு, முப்பது–முப்பத்து மூன்று, முப்பத்தைந்து முப்பத்தாறு. முப்பத்தெட்டு, ஐம்பத்தாறு, அறுபது, அறுபத்துநான்கு. தொண்ணூற்றாறு நூறு ஆகிய எண்களுக்கான தொகைப் பெயர்கட்குப் பொருள் கூறப்பட்டுள்ளன. இந்தமுப்பத்தைந்து எண்களின் தொகைகட்கு மொத்தம் நானூற்று இருபதுக்கு மேற்பட்ட சொற்களைத் தந்து விளக்கியுள்ளார் தமிழ் நிகண்டுகளின் வரலாற்றில் வேறெப்போதும் பல்பொருட் தொகைச் சொற்கள் இந்த அளவிற்குப் பல்கிப் பெருகியது இல்லை எனலாம்.

இதே நூற்றாண்டில் சதுரகராதி செய்த வீரமாமுனிவரும் கூட தம் தொகையகராதியில் இருநூற்றுத் தொண்ணூற்றொன்பது சொற்களுக்கே பொருளுரைத்துள்ளார் என்பது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. பொருட் தொகை நிகண்டு நிறைய சொற்களைப் புதிதாய் இணைத்துக் கொண்டுள்ளது. சதுரகராதியில் ஐந்து என்பதற்குரிய சொற்கள் ஐம்பத்தைந்து தரப்பட்டுள்ளன. ஆனால் இதற்குப் பொருட்தொகை நிகண்டு எழுபத்தெட்டு சொற்களைத் தந்துளளது. இதுபோன்ற சான்றுகள் பொருட்தொகை நிகண்டின் நல்ல வளர்ச்சி நிலையை உணர்தற்கு உதவுகின்றன. மகளிரால் மலரும் மரம் பத்து, அவிநயம் இருபத்து நான்கு என்பன போன்ற அரிய செய்திகள் பல இதன்கண் அமைத்துள.

இம்முறையில் 'தொகை நிகண்டு' என்ற ஒன்றைச் சுப்பிரமணியக் கவிராயர் என்பார் செய்தார் என்ற செய்தியை நாமதீப நிகண்டின் பாயிரக் குறிப்பால் அறிகிறோம். இதுபற்றிய பிற செய்திகள் ஏதும் தெரியவில்லை.

சென்ற நூற்றாண்டில் தொகைப் பெயர் விளக்கம் என்றோர் நிகண்டு வேதகிரி முதலியார் என்பவரால் செய்யப்பெற்றது. மற்றும் இலக்கத் (தொகுதி முறையின்) திறவு கோல் என்ற ஆர்வமூட்டும் பெயரில் ஓர் நிகண்டு செய்யப்பட்டதாகச் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி அறிவிக்கிறது. இந்நிகண்டுகள் கிடைக்காமையி னால் அவற்றின்தொகைப்பெயர்கள் குறித்து ஏதும் தெரியவில்லை. ஆயினும் இவற்றுள் தொகைப்பெயர்கள் மிகுதியாக இடம் பெற்றி ருக்கலாம் எனத் தோன்றுகிறது.

ஒரே எண்ணிக்கையுள்ள பல்பொருட்பெயர்களைத் தொகுத் துச் சுட்டி எளிதில் நினைவிற் கொள்ளும்பொருட்டும், இத்தனை என்று வரையறுத்துச் சுட்டுதற் பொருட்டும் வழங்கப்பட்ட தொகைச் சொற்களை நிகண்டாசிரியர்கள் நூலின்கண் சேர்த்துக்கொண்டு பொருளுரைத்ததில் கீழ்க்காணும் வளர்ச்சிநிலைகள் இருந்துள்ளன.

1. பொருட் டொகுதிகள் தோறும் இடம்பெற்றிருந்த தொகைச் சொற்கள் தனித் தொகுதியாக ஆக்கும் அளவிற்கு பல்கி இருந்தன
2. தனித் தொகுதியாக (பன்னிரண்டாம் தொகுதி) சில நிகண்டு களில் இடம்பெற்றிருந்தவை பிற்காலத்தில் தனி நிகண்டா கவே செய்யும் அளவிற்குப் பெருகின.
3. முதல் நிகண்டுகளில் விளக்கப்பெறாத சில தொகைப் பெயர் வகைகள் பின்வந்தோரால் பொருண்மை சுட்டப்பெற்றுள்ளன
4. திவாகரத்தில் இடம்பெற்ற நூற்றுமுப்பத்தொன்று தொகைப் பெயர்கள் பொருட்டொகை நிகண்டில் நானூற்றிருபது ஆக வளர்ந்துள்ளமை அவைகளின் வழக்காற்று மிகுதியை உணர்த்துகின்றன.

அடிக்குறிப்புகள் :-

1. இன்னாசி. சூ. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 368, 69.
2. ஜெயதேவன். வ, தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, பக். 123. (சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு அளிக்கப் பட்ட பி. எச். டி. ஆய்வேடு)
3. இன்னாசி. சூ, சதுரகராதி ஆராய்ச்சி, பக். 138.
4. பிங்கல நிகண்டு, கழகப் பதிப்பு, 1978, பக். 61.
5. இன்னாசி. சூ, சதுரகராதி ஆராய்ச்சி, பக். 140.
6. சுந்தரசண்முகம், அகராதிக்கலை, பக். 288.
7. பாரதி தீபம், சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பு, 1980, பக். 100–2.
8. சுந்தரசண்முகம், அகராதிக்கலை, பக். 332.

———(o)———

ஜெயகாந்தனின்
'ஜய ஜய சங்கர' — திறனாய்வு‡

— து. மூர்த்தி

அகிம்சையும் வன்முறையும் :

சத்தியமூர்த்தி 'பலாத்காரத்தைச் சந்திப்பது எப்படி? என்ற புத்தகம் எழுதியதற்காகச் சிறை வைக்கப்பட்டுள்ளான். ''அகிம்சையை ஒரு சித்தாந்தமாக ஏற்றுக்கொண்டவர்கள், பலாத்காரவாதிகளை மட்டும், பலாத்காரமாகவே அடக்கிவிடலாம் என்று நினைக்கின்றார்கள்'' என்று தன் மகனைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் சிங்கராயர். இங்கே பலாத்காரம் என்பதும் அகிம்சை என்பதும் குழப்பப்படுகின்றன.

'அகிம்சை' என்ற சொல் பொதுவாக, 'இம்சிக்காமல் இருத்தல்' என்று பொருள் தந்தாலும் அது ஒரு சித்தாந்தமாக—ஒரு குறிப்பிட்ட வர்க்கம் முன்னே வைக்கும் அரசியல் முழக்கமாக-ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தார்க்கு மட்டுமே பின்பற்றப்படுவதற்கான உபதேச முழக்கமாக இன்று எழுப்பப்படுகின்றது. எனவே 'அகிம்சை'யை விளங்கிக்கொள்ள 'காந்திய அகிம்சை' என அச்சொல்லை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

ஜெயகாந்தன் போன்றோர் முன்னிறுத்தும் 'அகிம்சை' என்பதன் அடிப்படை என்ன? ஆளும் வர்க்க நலன்களுக்கு எதிராக உழைக்கும் மக்கள் கிளம்பிவிடக் கூடாது என்பதுதானே! இந்திய வரலாற்றில் அகிம்சை முதலாளிகளுக்கோ, அவர்தம் கூலிப்படைகளுக்கோ என்றுமே அறிவுறுத்தப்பட்டதில்லை; உழைக்கும் மக்களுக்கு மட்டுமே வற்புறுத்தப்படுகின்றது. உழைக்கும் மக்களைக் கொடூரமாக அழுத்தி வைத்திருக்கும் சமுக அமைப்பின் மேற்போர்வையே-தத்துவ வடிவமே-அகிம்சை என்பதாகும்! இது உழைக்கும் மக்களுக்குப் புரிந்துவிடக்கூடாது என்பதே காந்திய பஜனைகளின் உள்ளீடாகும். வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், சுரண்டல் ஆகியவை மறைமுகமான மிருகத்தனமான வன்முறையாகும். இதை எதிர்த்து ஒடுக்கப்படும் வர்க்கம் ஓங்கியெழும்போதெல்லாம், அவனைத் திசைதிருப்பவே அகிம்சை பயன்படுத்தப்பட்டுவருகிறது. ஜீவகாருண்யம் என்பதும் அகிம்சை என்பதும் எதிரியின் கையில் உள்ள சாட்டைகளாகவே உள்ளன. ஜாலியன்வாலாபாக்

---

‡துணர் ௩௭, மலர் ௧, பக். 29-இன் தொடர் கட்டுரை

படுகொலையின்போது மட்டும், மக்கள் கையினில் ஆயுதம் இருந் திருந்தால்; நாராயண்பூர், பிப்பிரா, பெல்கி ஆகிய இடங்களில் மக்கள் மேல் அடக்குமுறை றஏவிவிடப்பட்டபோது, மக்களின் கைக ளில் ஆயுதம் இருந்திருந்தால், உண்மையாகவே பல ஜீவன்கள் காப்பாற்றப்பட்டிருக்கும் இன்று அகிம்சை என்பது மக்களுக்காக மக்கள் போராடத் திரள்வதேயாகும். எனவேதான் மார்க்சிய சமூக விஞ்ஞானிகள், 'மக்களை நேசிக்கும் எந்தப் பொதுவுடைமை யானனும் அகிம்சையை எதிரிவர்க்கப்போர் வடிவமாகக் காண்பான்' என்கிறார்கள். இதற்கு எதிர்வடிவமாக புரட்சியை முன்வைக்கும் போது வன்முறை தவிர்க்கமுடியாததாகும். கும்பல்கள் (Gang) சேர்ந்து கொள்ளையடிக்கும் ரவுடித்தனத்தையும், (Rowdism) மக்கள் தங்கள் தோள்களை அழுத்தும் சுரண்டல் சுமையைத் தூக்கி எறியும் புரட்சியையும் (Revolutionary violance) ஒன்றாகக் குழப்பிக்கொண்டு – அல்லது குழம்பிவிட்டதுபோல் பாவித்துக் கொண்டு – போலி அகிம்சையை இலக்கியத்தின் வழி பரப்ப விழைவது துல்லியமான இலக்கிய ரவுடித்தனமாகும்.

போராட்டமும் தீர்வும் :

கட்டாயப்படுத்தப்படுகின்ற உழைக்கும் வர்க்கம் ஒன்று சேர் கின்றது. அது அனைத்துத் திருத்தல்வாதிகளையும் ஒதுக்கித் தள்ளி, தன்னுள்ளேயே போராடிப் போராடி ஒற்றுமை அடைகின் றது. தங்களை இப்படிக் கீழான–இழிந்த நிலையில் வைத்துக் கொண்டிருக்கும் எதிரிவர்க்கத்தின் முன் பாதிக்கப்பட்ட மக்கள் அணியைத் திரட்டுகின்றது. சலுகைகளை நிராகரிக்கின்றது! சமரசங்களை முறியடிக்கின்றது!! எதிரிவர்க்கம் முடிவில் மூர்க்கத் தனமாக தன் பலாத்கார சக்தியை மக்கள் மேல் ஏவி விடுகின்றது. அப்போது புரட்சி வர்க்கம் தன்னைப் பாதுகாத்துக்கொள்கின்றது. பாதுகாத்துக்கொள்வது என்பது ஓடி ஒளிவதன்று; காட்டிக்கொடுப் பதன்று; திருப்பித்தாக்குவது; 'போரற்ற உலகைப்படைக்க இறுதி யாகப் போராடுவது', எனவேதான் புரட்சியில் வன்முறை தவிர்க்க முடியாததாகின்றது. இன்றைய சுரண்டல் வர்க்க ஆதிக்க சமுதா யத்தில் 'சத்தியமூர்த்தி' என்ற 'புரட்சிக்காரன்' அகிம்சையையும் ஏற்கின்றான், பலாத்காரத்தையும் ஏற்கின்றான் என்பது திருத்தல் வாதம்: காந்தியப் புரட்டு!

கடவுளும் கம்யூனிஸப் புரட்சியும் :

உமா என்றொரு பாத்திரமும் கம்யூனிஸ்டாகப் படைக்கப் பட்டுள்ளது.

> ''நான் கடவுள் நம்பிக்கை அற்றவள்தான். கடவுள் கடவுள் நம்பிக்கை அற்றவர்கள் மனிதர்கள் மீதாவது நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கவேண்டும். அப்படி ஒரு நம்பிக்கை எனக்கு ஆச்சார்ய சுவாமிகளிடம் உண்டு''
> (1977b, பக். 30)

என்கிறாள் இவள்.

ஓ! எப்பேர்பட்ட கம்யூனிஸ்ட் இவள்! உமாவின் இப்பாத்திரப் படைப்பில் வியப்பு எதுவும் இல்லை. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரலாற்றில் பல தத்துவ 'வழுக்கல்' களில் ஒன்றாகிய 'கடவுள்' பற்றிய கருத்தையே இவள் பிரதிபலிக்கின்றாள். மாநாட்டிற்காகக் கூடும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், அப்படியே மதுரை மீனாட்சியம்மனையும் தரிசித்துவிட்டுச் செல்லும் பாராளுமன்ற புரட்சிக்காரர்கள் நிறைந்த இந்தியாவில், உமா சரியான படைப்பு தான். மேலும், 'ஆஸ்திகர்கள் யார் வேண்டுமானாலும் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினர் ஆகலாம்' என்று 'வாக்குச்சீட்டு' களையே மனதில் கொண்டு. தத்துவ விளக்கம் தரும் மேதைகளே இன்றைய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர்களாவுகம் இருக்கி றார்கள். இந்தியாவின் புரட்சிக்குத் தடைக்கல் எங்கிருந்து வருகி றது என்பதையே இது காட்டுகின்றது.

> ''கடவுளே எங்கள் முன் பிரசன்னமாகித் தடுப்பினும் அதை மறுத்து. எங்கள் காரியங்களை நாங்கள் செய்து முடிப் போம் என்று விரதம் ஏற்றுவிட்டோம்'' (மேற்படி, பக். 35)

என்கிறாள் உமா.

> ''லோக க்ஷேமத்திற்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொள் கிற மகான்கள் எவருடைய தூஷணைகளையும், எவருடைய நிந்தனைகளையும் பொருட்படுத்தமாட்டார்கள் என்றுதானே நீ சொல்கின்றாய்? கடவுளை மறுத்து ஏதோ காரியம் ஆற்றுவ தாகச் சொன்னாயே அந்தக் காரியம்தான் கடவுள்'',
> (மேற்படி, பக். 35–36)

என்று அளக்கின்றார் பெரியவாள்.

படைப்பாசிரியன் ஒன்று புரிந்துகொள்ளவேண்டும். தனி மனித ஆற் றல்கள் மட்டுமே, கால வரலாற்றைக் கட்டுப்படுத்தவும் முடியாத போது தடைப்படுத்தல் இயலுமா? பைபிளை, திருவாசகத்தை ஐயன்ஸ்டினின் கருத்தடங்கிய ஆய்வுப் பெட்டமாக ஆக்கிக்காட்டும் அறியாமையைவிட, பொதுவுடைமைப் புரட்சியைக் கடவுள் காரியம் என்னும் கயமை அஞ்சத்தக்கதாகும். ஆசிரியர் எவ்வளவு தான் கவிநயத்துடன் அழகாக எழுதினாலும், சமூக வரலாறு அதை

வீழ்த்தியே தீரும். 'சரியான அரசியல் கண்ணோட்டமில்லாத ஒரு படைப்பு எவ்வளவுதான் அழகாக இருப்பினும், அது ஒதுக்கித் தள்ளப்படவேண்டிய படைப்பு' என்னும் திறனாய்வு வழிப்புணர்வு உள்ளவர்களே உண்மையான பொதுவுடைமையாளர்கள் ஆவார்கள். 'என் பாஷையில் கடவுள், உன் பாஷையில் புரட்சி' என்று பெரியவாளைப் பேசவைக்கும் ஜெயகாந்தன் (மேற்படி பக். 37) தன் பேனாவின் வலிமையை அளவுக்கதிகமாக நம்புகின்றார். ஆனால், இன்றோ, கலைஞர்கள் சரியான கருத்துக்களுக்குப் பழக்கப்பட்டு வருவதால் தவறான கருத்துக்களை உடனடியாகத் தள்ளிவிடுகின்றார்கள்.

புதிய ஆசிரமம் :

கடைசியாக ஆதி (மறையனாகப் பிறந்து, காந்தி பக்தராக வளர்ந்து, பெரியவாளோடு வேலிக்கு வெளியே நின்று, பேசி, நிறைவெய்தியவர்) 'ஆசிரமம்' கட்ட திட்டம் தீட்டுகின்றார்.

> ''நமது ஆஸ்ரமம் உடைமை மறுப்பு என்னும் கடைக்காலின் மீதே எழுப்பப்படுகின்றது...! 'எல்லா அதிகாரங்களும் சோவியத்துக்கே' என்று லெனின் முழங்கியதற்கொப்ப எல்லாம் ஆஸ்ரமத்திற்கே என்பது நம் கோஷம் ஆனால் நாம் இதில் விசேஷமானதிருத்தத்தையும் கொண்டுள்ளோம். எல்லா அதிகாரங்களும் சோவியத்துக்கே என்று லெனின் சொன்னதுபோல, நாம் எந்த அதிகாரங்களையும் சமூகத்தில் கேட்பதுமில்லை; ஏற்பதுமில்லை மேலும் எல்லாச் சமூக அதிகாரங்களுக்கும் உட்பட்டு இயங்குவது (அடிக்கோடு கட்டுரையாசிரியர் இட்டது) என்று உறுதி கொண்டுள்ளோம்''. (மேற்படி, பக். 51)

இதுதான் ஆதியின் திட்டம், தனி உடைமை அற்ற ஆசிரமம். சமூகத்தின் எல்லா அதிகாரங்களுக்கும் உட்படுதல் !

தனி உடைமைச் சமுதாயத்தின் அனைத்து அதிகாரங்களுக்கும் உட்படுதலும், அதே சமயத்தில், அதே சமுதாயத்தில் தனி உடைமை அற்ற ஆசிரமத்தில் வாழ்தலும் எப்படி முடியும்? ஆசிரியர் மிகப்பெரிய தத்துவத்தை ஆதியின் வாயிலாக உதிர்த்துவிட்டதாக மகிழலாம். ஆனால், குழப்பங்கள் கொள்கைகளாகா! இன்றைய உடைமைச் சமுதாய அமைப்புக்கு எந்தவித ஊறும் இன்றி, அதை மாற்ற முயற்சிகூட செய்யவேண்டாம் என்ற வகையில், அந்தச் சமுதாயத்திற்குள்ளேயே ஒருசிலர் சன்னியாசிகளாக, ஆசிரமவாசிகளாக ஒதுங்கி வாழ்வதே சிறந்தது என்று தீர்வு சொல்வது, இன்றைய ஆளும் வர்க்க அதிகாரத்தைத் தூக்கியெறியத் துடிப்பவர்களைப் பின்னோக்கி இழுக்கும், படுபிற்போக்கான முயற்சியாகும்.

அரசு அதிகாரியும், புரட்சிக்காரனும் :

கதையின் இறுதியில் பெரும்பங்கு பெறுபவர்களான சத்திய மூர்த்தியும் சிறையதிகாரி மூர்த்தியும், இனி விமர்சிக்கப்படவேண்டியவர்களாகின்றார்கள். இந்தியாவில் சட்டமுறையிலேயே அறிவிக்கப்பட்ட நெருக்கடி நிலைமையைத் தொட்டுச்சென்று கதை முடிகின்றது சிறையதிகாரி மூர்த்தி, சத்தியமூர்த்தியின் கல்லூரி நண்பன் நெருக்கடி நிலை நாட்டில் அறிவிக்கப்பட்டுவிட்டது. சிறையில் கொடுமைகள் ஏராளமாக நடக்கின்றன. சத்தியமூர்த்தி, மூர்த்தியிடம் சிறைக் கொடுமைகளைத் தவிர்க்க வாதாடுகின்றான்; உண்ணாவிரதம் இருக்கின்றான், மூர்த்தியோ அன்பே உருவானவன்; வெளியிலிருந்துவரும் மிரட்டலுக்குப் பயந்து நெருக்கடி நிலையில் கைதிகளைக் கொடுமையாக நடத்துகின்றான். சத்தியமூர்த்தியிடம் தன்னை நம்பும்படி வாதாடுகின்றான்''-இவை கதைநிகழ்ச்சிகள்.

நிகழ்ச்சிகளைத் தனிமைப்படுத்தி ஆராய்வது மார்க்சியம் அன்று! மூர்த்தி என்பவன் தனிமனிதன் அல்ல; அரசின் உறுப்புகளில் ஒன்றைப் பிரதிபலிப்பவன்; பிரதிநிதியானவன். உழைக்கும் மக்களை ஒடுக்க அரசின் மாதக்கூலிகளுள் ஒருவனாக இருப்பவன். அவனை உத்தமனாகக் காட்டிவிடுவதாலேயே அரசு அதிகாரிகளின் வர்க்கத்தன்மை மாறிவிட்டதாகப் பொருள்கொள்ள முடியாது.

> ''எனது புரட்சிக்காரன் எவ்வளவு உத்தமமானவனோ அந்த அளவு உத்தமமானவனே எனது போலீஸ்காரனும் நான் தீயவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேனே ஒழிய அவர்களைக் கண்டதில்லை. அவர்களை இலக்கியக் கண்கொண்டு நான் கண்ட மாத்திரத்தில், அவர்கள் நல்லவர்களாக மாறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு (1977, பக். 59)''.

என்று பின்னுரையில் கூறுகின்றார் ஆசிரியர்.

படைப்பாளனின் 'இலக்கியக்கண்' எவ்வளவு கொடிய நோயுடையதாக உள்ளது என்பதையே இது காட்டுகின்றது. படைப்பாளனின் கண்ணோட்டத்தில் தீயவனும் நல்லவனே என்பதோ, புரட்சிக்காரனும் போலிஸ்காரனும் ஒரே தன்மையானவரே என்பதோ பிரச்சனை அல்ல. நடைமுறையிலிருந்து விதிக்கு வரவேண்டும். ஒரு போலீஸ்காரனை நல்லவனாக்கிக் காட்டிவிடுவதால், ஆளும் வர்க்கமோ, அரசோ நல்லதாகிவிடாது. அதைப்பற்றிப் புகழ்தல் என்பது திட்டமிட்ட பிற்போக்குத்தனம்.

எதிரிவர்க்க ஆயுதத்தைத் தாங்கள் பயன்படுத்தவே முடியாது என்று உணர்ந்த உழைக்கும் மக்கள், தங்களுக்கென்றே பணிபுரியும் ஓர் அரசை நிறுவிக்கொள்ள போராடுகிறார்கள், இவர்களைத் திசைதிருப்ப, இவர்கள் குரலைக் கேட்கக்கூடத் தயாராக இல்லாத எதிரி வர்க்க ஆயுதத்திடமும், அதை பாதுகாக்கும் சட்டத்திடமும் சக்தியிடமும் விசுவாசம் காட்டவேண்டும் என்பது, வேண்டும் எனில் நாம் அதைப் பிடித்துக்கொண்டு பயன்படுத்த முடியும் எனத் தூண்டுவதும் திரிபுவாதமே! இதை உள் நோக்கமாகக்கொண்டே மூர்த்தி என்ற சிறையதிகாரி மிக நல்லவனாகப் படைக்கப்பட்டுள்ளான்.

நாவலாசிரியரின் 'காந்தியப் பாடம்' நீள்கின்றது. சத்திய மூர்த்தியோ புரட்சிக்காரன். மகாலிங்கத்தைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டாலும், காந்தியத்தை வழிபடவும் அனுமதிக்கின்றான். காந்திய வழிபாடு என்பது நேர்முகமாகவும் எதிரி முகமாகவும் அனுசரணையாகவே காட்டப்படுவது, பழைய நிலவுடமைச் சமூக உறவுகளை நியாயப்படுத்தும் முயற்சியே ஆகும்.

பகைவனும் துரோகியும் :

காஞ்சி, காமகோடிப் பீடாதிபதி சங்கராச்சாரியாரின் சீடராக விளங்க விரும்பும் ஜெயகாந்தன், இறுதியில் மிகத்தெளிவாகத் தன்னை அடையாளம் காட்டுகின்றார். சத்தியமூர்த்தியின் தந்தையிடம், சத்தியமூர்த்தியைப் பற்றிக் கூறுகின்றார் மூர்த்தி.

> ''எனக்கு அவர் விஷயத்தில் இருக்கிற ஒரு பெரிய ஆறுதல் நல்ல வேளையாக அவர் வெளியிலிருக்கிற எந்த இயக்கத்தோடும் சம்பந்தமுடையவர் அல்ல என்பதுதான். சுதந்திரமான சிந்தனைகள் வளர்த்துக்கொண்டிருக்கிற ஒரு காரணத்திற்காக ஏன் தான் அவரைச் சிறையில் அடைக்க வேண்டுமோ? (மேற்படி, பக். 25)'' என்கிறார் மூர்த்தி.

கறுப்புமையை வெள்ளைப்பணமாக்கும் நாவல் வணிகராக ஜெயகாந்தன் கூசாமல் தன்னைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

நாவலாசிரியர் விரும்பும் சுய சிந்தனை—எந்தவிதமான இயக்கத்தின் வழியும் செல்லாத சுய சிந்தனை—என்பதே வாதத்திற்கு உரியது; புரட்சியாளர் நோக்கில் மறுப்புக்குரியது, இத்தகைய சுய சிந்தனையாளர்களால், ஆதீத மனிதர்களால், சுய சிந்தனை—சுதந்திரச் சிந்தனை எனக் கூறிக்கொள்ளும் அதிசுதந்திர எழுத்தாளர்களால் என்ன செய்ய முடியும் என்பது ஒருபுறம் இருக்கட்டும். சுதந்திர சுய சிந்தனைதானே என்றுகூட விட்டுவிடாத ஆதிக்க

முகாம், இயக்க வழிப்பட்ட. ஒரு புரட்சிகளும் பாதையை ஏற்றுக் கொண்ட உண்மையான கம்யூனிஸ்டுகளை என்னென்ன செய்யும்?

ஜெயகாந்தன் குறிப்பிடுகின்றார்:

> "எனது நாவல்களில் வரும் பாத்திரங்கள் எல்லாம் என் மூலமாகப் பிறக்கின்றார்கள் என்பதால் அவர்களை நான் சாமானியர்களாகக் கருத முடிவதில்லை" (மேற்படி, பக். 58)

உண்மைதான்! அவர்கள் சாமானியர்கள் அல்லவே அல்ல!! வர்க்க விரோதிகளை விட, வர்க்க துரோகிகள் படுபயங்கரமானவர்களே!!!

ஆதார நூல்கள் & கட்டுரைகள்:

1. மூர்த்தி. து, 1978. 'பாராட்டுமுறைத் திறனாய்வு' சென்னை: சங்கம். (வெளியிடப்படும்)
2. ஜெயகாந்தன், 1976, ஜய ஜய சங்கர-I. சென்னை: மோதி பிரசுரம்.
3. ,, 1977a ஜய ஜய சங்கர-II. சென்னை: மோதி பிரசுரம்.
4. ,, 1977b, ஜய ஜய சங்கர-III. சென்னை: மோதி பிரசுரம்.
5. ,, 1977c, ஜய ஜய சங்கர-IV. சென்னை: மோதி பிரசுரம்.
6. Mao Tse Tung, 1967, Selected works of Mao Tse Tung. Peking. Foreign Longu ages Press.
7. Marx, Karl and Engles, Frederic, 1975, Manifes to of the Communist Party. Moscow Progress Publishers.

——— (o) ———

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு

1. திரு. **எஸ். நடராசன்,** எம். எல். ஏ.,
தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

2. திரு. புலவர் **க. வெள்ளைவாரணனார்,**
பேராசிரியர். தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

3. திரு. புலவர் **பி. விருத்தாசலம்,** எம். ஏ.
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

4. திரு. புலவர் **ச. பாலசுந்தரம்,**
367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.

5. திரு. புலவர் **சி. கோவிந்தராசன்,**
கரந்தை, தஞ்சாவூர்-2.

6. திரு. புலவர் **மீனா. இராமதாசன்,** எம். ஏ.,
முதனிலைத் தமிழாசிரியர், உ. மே. பள்ளி,
கரந்தை, தஞ்சாவூர்-2.

7. திரு. **அரங்க வே. சுப்பிரமணியன்** பி. ஏ.,
அமைச்சர், க. த. சங்கம், பொழிற்றொண்டர்.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு	வெளிநாடு
1.	ஆண்டு வரி	... 20—00	... 030—00
2.	தனி இதழ்	... 02—00	
3.	ஆயுள் வரி	... 250—00	... 250—00

—: **சங்க உறுப்பினர்கள்** :—

திங்கள் வரி	... 000—25
ஆண்டு வரி	... 003—00
ஆயுள் வரி	... 100—00

Regd No. TN/TJ/17..

உ

தமிழ் வாழ்க!

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

எண்:

திரு. ....

அவர்கள்

....

....

....

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்–613 002.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கைக் கோவை	0 – 12
சித்தரந்தாதி	0 — 12
சுருதி வீணை	0 — 25
கவியரசு நினைவுமலர்	1 — 00
சிவமும் செந்தமிழும்	0 — 25
Garland of Tamil Poetry	2 — 00
கச்சிக் கலம்பகம் —(பூண்டி அரங்கநாத முதலியார்)	0 — 50
தமிழரசி குறவஞ்சி	0 — 62
யாழ் நூல் —சுவாமி விபுலானந்தர்	50 — 00
கட்டுரைப் பொழில் (மணிவிழா மலர்)	30 — 00
மெய்ஞ்ஞானத்தின் – கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2 — 00
நக்கீரர் — ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3 — 00
கபிலர் ,, ,,	4 — 00
பிற வெளியீடுகள்:	
கலைக்கூத்தன் கவிதைகள்	6 — 00

ஆசிரியரும் வெளியிடுபவரும்: திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ.,
கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர்: திருமதி S. நிர்மலா,
அன்னை அச்சகம், 1734, காந்தி சாலை, தஞ்சாவூர்-613 002.